# புலமை

மலர் 01 ஆடி 2004 இதழ் 01

■ 'புலமை'யின் நோக்கம் 01

■ இலங்கையின் இன்றைய தமிழ்க் கல்விச் சவால்கள் 03
- மாரிமுத்து கணபதிப்பிள்ளை

■ கல்வி உளவியலும் வகுப்பறையும் 14
- உலகநாதர் நவரத்தினம்

■ மாற்றங்களை முகாமை செய்தல் 21
- தையல்முத்து தனராஜ்

■ விரிவடையும் தேவைகளுக்கேற்ப மாறிவரும் ஆசிரிய வகிபாகம் 29
- எம். எச். எம். ஹஸன்

■ சொல் வளர்ச்சிப்போக்கும் இன்றைய தேவையும் 38
- புண்ணியேஸ்வரி நாகலிங்கம்

■ மலையகம் என்ற பின்புலத்தில் எல்லோருக்கும் கல்வி...? 47
- லெனின் மதிவாணம்

■ கல்விச் சிந்தனையாளர் வரிசை : லோறன்ஸ் கோல்ட்பேர்க் 59

■ தமிழ்க் கல்வியில் தடம் பதித்தோர் : ச. ஹன்டி பேரின்பநாயகம் 63

கல்வியியற் காலாண்டிதழ்

# புலமை காலாண்டிதழ்

மலர் 01 ★ ஆடி 2004 ★ இதழ் 01


தமிழ் கல்வியுடன் தொடர்புடைய ஆளணியினரின் கற்றல், கற்பித்தல் தேர்ச்சியினை விருத்தி செய்வதினை நோக்கமாகக் கொண்ட இதழ்.


ஆசிரியர்கள்

திரு. உ. நவரட்ணம்

(பணிப்பாளர், ஆசிரியவாண்மை அபிவிருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம்)

திரு. மா. கணபதிப்பிள்ளை

(தலைவர், தமிழ்ப்பிரிவு, றோயல் கல்லூரி)

ஆலோசகர் குழு

பேரா. சோ. சந்திரசேகரன் (கொழும்புப் பல்கலைக்கழகம்)

பேரா. சபா ஜெயராஜா (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

கலாநிதி ஹுசைன் இஸ்மாயில் (துணைவேந்தர், தென்கிழக்குப் பல்கலைக்கழகம்)

கலாநிதி தி. கமலநாதன் (கல்வியியல் கல்லூரி, வவுனியா)

கலாநிதி மா. கருணாநிதி (கொழும்புப் பல்கலைக்கழகம்)

திரு. தை. தனராஜ் (பணிப்பாளர், தமிழ்த்துறை, தேசிய கல்வி நிறுவகம்)

நிர்வாக ஆசிரியர்

திரு. க. குமரன்



இவ் இதழ் தொடர்பான கடிதத் தொடர்புகள், கட்டுரைகள் ஆகியவற்றை அனுப்பி வைக்க வேண்டிய முகவரி :

திரு. உ. நவரட்ணம்
83/9B, 37வது ஒழுங்கை,
கொழும்பு - 06.



ISSN 1391-9814

விலை ரூபா 50/-

# ‘புலமை’யின் நோக்கம்

"புலமை" என்ற இச்சஞ்சிகை ஆசிரியர் கல்வி மேம்பாட்டை நோக்காகக் கொண்டு வெளிவருகின்றது. ஆசிரியர் கல்வியைப் பொறுத்தவரை இன்று வளர்ந்த நாடுகள் எண்ணற்ற புதிய சிந்தனை-களுடன் வகுப்பறைச் செயற்பாடுகளை வினைத்திறனுள்ளதாக்கி வருகின்றன. அவர்களின் நவீன சிந்தனைகள் இருபத்தைந்து, ஐம்பது ஆண்டுகளின் பின்புகூட எமது தமிழ்க் கல்விக்கு வந்து சேர்ந்ததாக இல்லை.

ஆசிரியர் தமது கற்றலை இற்றைப்படுத்த (up-date) வேண்டிய-வர்கள். அதற்குப் பெரும் தடையாக இருப்பதிலொன்று மொழிவழிக் குறைபாடு. சுயபாஷையில் படித்த ஆசிரியர்கள் ஆங்கிலமொழி அறிவுக் குறைவால் ஆழமான பல கருத்துக்கள் உள்ள நூல்களை வாசித்து விளங்கும் ஆற்றலற்றுள்ளனர் என்ற கருத்து வெளிப்படையானது. ஆனால், சகோதர மொழியான சிங்களத்தில் பல கருத்துக்கள் உடனுக்குடன் வந்து சேரும் அளவுக்கு பல நிறுவனங்களும் சஞ்சிகை-களும் செயற்படுகின்றன. இந்நிலையில், தமிழ்மொழியில் ஆசிரிய வாண்மை விருத்தியை அடிப்படையாகக் கொண்டு சஞ்சிகைகள் வரவில்லை என்ற குறைபாட்டை "புலமை" நிறைவு செய்யும் என்று எதிர்பார்க்கலாம்.

அறிகைப் புலம் விரிவானது. எமது தேடல்களோ குறைவானது. இனிவரும் காலம் அறிவுத் தேடலின் காலம். எமது சமகாலத்தில் வளரும் சிந்தனைகளை எம்மவர் மத்தியில் பங்கிடாவிட்டால் எதிர்காலத்தில் அறிவியல் ரீதியாகவும் நாம் பின்தள்ளப்பட்டவர்களாகவே இருப்போம். "எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள்

காண்பது அறிவு" என்பார் திருவள்ளுவர். கல்வி அறிவியல் தொடர்பாக உலகில் உள்ள கருத்துக்களையும், எமது நிலைமையையும் சரியாக இனங்கண்டு எமது ஆசிரியர்கள் தம்மைச் சுயமதிப்பீடு செய்ய வேண்டும். பொருத்தமற்றவற்றைக் களைந்து பொருத்தமான கருத்துக்களை எமது வகுப்பறைகட்கு கொண்டு செல்வதால் வகுப்பறை வினைத்திறன் உள்ள இடமாக மாறுவதுடன் எம்மால் எதிர்பார்க்கப்படும் மாற்றங்களையும் ஏற்படுத்தலாம்.

எமது ஆசிரியர்கள் பல்வேறுபட்ட தரங்களில் உள்ளனர். ஆனால், அவர்கள் எல்லோரும் ஏதோ ஒரு வகுப்பறையில் கடமையாற்றுகின்றனர். வகுப்பறைக்குள் நுழையும் எல்லா ஆசிரியர்களும் பொருத்தமான பயிற்சியைப் பெற்று இருக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், எமது வகுப்பறைகளில் எந்தவிதமான பயிற்சியும் இல்லாத கணிசமான ஆசிரியர்கள் உள்ளனர். மேலும் பலர் கல்வியியல் உலகில் ஏற்பட்டு வரும் மாற்றங்களுக்கும், புதிய சிந்தனைகளுக்கும், பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்காதிருக்கின்றனர். எனவேதான், இவற்றை எல்லாம் மனதிற்கொண்டே தமிழ் கல்வியுடன் தொடர்புடைய ஆளணியினரின் கற்றல் கற்பித்தல் தேர்ச்சியினை விருத்தி செய்ய உதவ வேண்டும் என்ற நோக்குடன் "புலமை" வெளியாகிறது.

வாசகர்களாகிய நீங்கள் புலமை தொடர்பான உங்கள் கருத்துக்களை எமது நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தின் நாம் எமது வெளிப்படுத்தல்களில் தங்களின் கருத்துக்களுக்கும் மதிப்பளித்து எம்மைச் சரியாக்கிக் கொள்ள முடியும். ஒரு நூலில் பிறப்பு இலகுவானது. அது நிலைத்து நிற்பது உங்கள் கைகளில்தான் உள்ளது. ஆற்றலுள்ளவர்களின் பொருத்தமான விமர்சனங்களும், ஆக்கங்களும் இச்சஞ்சிகையை நிலைத்து நிற்கச் செய்யும். இந்தப் புனித பணியில் வளவாளர்கள் சேர்ந்து செயலாற்ற முன்வர வேண்டுமென வேண்டுகிறோம்.

நாளைய எமது ஆசிரிய சமூகம் நலிவுறாதிருக்க இன்றைய பணியாளர்கள் ஒத்தியங்குவதால் முன்னைய தலைமுறை விட்ட தவறில் இருந்து தப்பித்துக் கொள்ளலாம் என்பதைக் காட்டுவதுடன் "புலமை" உங்கள் பொருத்தமான ஆழமான விமர்சனத்துக்குள்ளாக வேண்டும் என்பதே எமது வேணவா.

# இலங்கையின் இன்றைய தமிழ்க் கல்விச் சவால்கள்

**மாரிமுத்து கணபதிப்பிள்ளை**

B.A.(Econ.), M.A. (Pol.Sc.), PGDE, PGDEM, SLPS I

தலைவர், தமிழ்ப் பிரிவு, றோயல் கல்லூரி

---

## அறிமுகம்

இலங்கையின் இன்றைய தமிழ்க் கல்வி பாரிய சவால்களுக்கு முகம் கொடுக்கின்றது. அத்தகைய சவால்கள் எவை? அவை எவ்வாறு தோற்றம் பெற்றன? அச்சவால்களின் தற்போதைய நிலை என்ன? என்ற நிலைகளை எமது சமகால வாசகர்களிடையே பகிரவேண்டும் என்ற எண்ணத்தில் உருவானதே இக்கட்டுரையாகும்.

தமிழ்க் கல்வி நீண்டபாரம் பரியம் கொண்டது. சங்ககாலம், சங்கம்மருவிய கால நூல்களிலேயே கல்வியின் சிறப்புப் பற்றியும், தேவைபற்றியும், கல்வியிலான் முகத்திரண்டு புண்ணுடையானே தவிர கண்ணில்லாதவன் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தகைய நீண்ட பாரம்பரியம் கொண்ட தமிழ்க்கல்வியால் அடையவேண்டியது என்ன என்பதை தமிழ்ச்சமூகம் அவதானத்துடன் குறிக்கோளாகக் கொண்டு அணுகி நடத்தை மாற்றங்களிலும், கல்வி அடைவுகளிலும் உயர்ந்திருந்ததைக் கண்டு கொள்ளத்தக்க இலக்கிய ஆவணச் சான்றாதாரங்கள்

உண்டு. ஆனால் 1970 களின் பின்னர் தமிழ்க்கல்வி தனது அடைவு மட்டத்தை அண்மிக்கவில்லை. அதற்கான காரணங்கள் என்ன என்பதை ஆராயின் இனவாதச்சிந்தனைகள், தரப்படுத்தல், ஆசிரியர் ஆட்சேர்ப்புச் சீரின்மை, போன்ற காரணங்களால் பாடசாலை மாணவர் இடைவிலகல், பாடசாலை செல்லாதோர் தொகை அதிகரிப்பு, தரம் ஐந்து புலமைப்பரிசில் சித்தியில் பாரிய வீழ்ச்சி, க.பொ.த. சாதாரணதரத்தில் சித்தியடைவோர் எண்ணிக்கைக் குறைவு, க.பொ.த.(உ.த.) சித்தியடைவோர் எண்ணிக்-கைக் குறைவு, பல்கலைக்கழகத்துக்குள் உள்நுழைவோர் எண்ணிக்கை வீழ்ச்சி, நாட்டுக்குப் பொருத்தப்பாடுடைய நடத்தைக் கோலங்களைக் கொண்ட நல்ல விழுமியங்கள், மரபுகள், சம்பிரதாயங்கள், நியமங்களை மதிக்கும் பரம்பரை ஒன்று உருவாகாமை போன்ற பல்வேறு பிரச்சனைகள் சவாலாக அமைந்து இன்று பாடசாலைக் கல்வியிலும், பல்கலைக்கழக கல்வியிலும் நம்பிக்கை இழந்த சமூகம் ஒன்று உருவாகி வருகிறது. தென் அமெரிக்க கல்விச் சிந்தனையாளர் "ஐவண் இல்லீச்" அவர்கள் குறிப்பிடுவது போல் பாடசாலைகள் இல்லாத நிலையை அவாவும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ள நிலையில் தமிழ்க்கல்வியின் சவால்களைச் சரியாக இனம் காண்பதும் அதற்கான பொருத்தமான கண்டறிதலை மேற்கொள்ளும் அதே வேளை நியாயமான தீர்வுகளாக எவை இருக்க-லாம் என்பதை அனுமானிப்பதும் இன்றைய காலத்தின் தேவையாகும். இப்பணியைச் செய்யலாம் என்ற எண்ணத்துடன் அணுகிய போது தோன்றிய சில கருத்துக்களை இக்கட்டுரை வெளிக்கொணர்கிறது எனலாம்.

## இலவசக்கல்வியும், தாய்மொழித் திட்டமும்

1948ம் ஆண்டு இலங்கை அரைகுறைச் சுதந்திரத்தைப் பெற்ற-போதும் கல்வியைப் பொறுத்தவரை ஆங்கிலக்கல்வியாகவே இருந்தது. அது ஒரு வர்க்கத்தின் தேவையை நிறைவு செய்வதாகவும், ஆங்கிலேயரின் தேவைக்குப் பொருத்தமான அதிகாரிகளையும், எழுது வினைஞர்களையும் உருவாக்கும் கல்வித்திட்டமாகவுமே இருந்தது. இந்த நோக்கத்தை அன்றைய கல்வித்திட்டம் நிறைவுசெய்தது. ஆனால்

கிராமிய மக்கள் கல்வியறிவற்றவர்களாகவே இருந்தனர். இந்த நிலையை அவதானித்த சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்கள் இலவசக் கல்வியின் அவசியத்தை 1943 களில் முன்மொழிந்து 1945 களில் இருந்து நடைமுறைப்படுத்தினார். உண்மையில் இலங்கையின் கல்வியியல் வரலாற்றில் இந்நடைமுறை பாராட்டுதற்குரியது. இருந்த போதும் இலவசக்கல்வியிலும், கற்றல் வயதிலும் மலையக மாணவர்கள் புறக்கணிக்கப்பட்டதையும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டும். கௌரவம் மிக்க சி. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களும்கூட தனது வர்க்க நலனில் அக்கறையுடன் தான் சிந்தித்தார் என்பது மனங்கொள்ளத் தக்கது. ஆனால் இன்று இலங்கையின் புகழ் பெற்ற கல்விமான்களில் பெரும்பாலானோர் இந்த இலவசக்கல்வித் திட்டத்தால் நன்மையடைந்த-வர்கள் என்றால் மிகையில்லை. இலவசக்கல்வியுடன் அண்மித்து கொண்டுவரப்பட்ட தாய்மொழி மூலம் கல்வி கற்கலாம் என்பது கிராமப்புறக் கற்றல் சூழலைத்தூண்டிய பிரதான காரணி எனலாம். ஆங்கிலக் கல்விக் கனவான்களிடம் அகப்பட்டுக் கிடந்த “அறிகை” கிராமப்புறப் புத்திஜீவிகளை நோக்கி நகரத் தொடங்கியது. இச் சூழலில் கொண்டு வரப்பட்ட மத்திய மகாவித்தியாலயங்களும் கிராமப்புற மக்களின் கற்றல் தூண்டுகைக்கான மற்றொரு பிரதான காரணி எனலாம். இத்தகைய நடவடிக்கைகளால் இன்று நாடுபரந்த ரீதியாக ஏறத்தாழ 10,000 பாடசாலைகளும், இரண்டு லட்சம் ஆசிரியர்களும், 44,00,000 மாணவர்களும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளநிலையை அவதானிக்கலாம். இந்த எண் அம்சங்களை தருவதனூடாக இவையாவும் தமிழ்க்கல்விச் சவாலுக்கு எவ்வகையில் அடிப்படைகளாக அமைந்-துள்ளன என்பதையும் நாம் நோக்கவேண்டும்.

1956ம் ஆண்டுகளுக்குப் பின் இனவாதச் சிந்தனைகள் உச்ச நிலையடைவதை அவதானிக்கலாம். இலங்கையின் கல்வி வளவாளர்கள் எனச்சொல்லப்பட்ட எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அவர்களும், ஜே. ஆர். ஜெயவர்தன அவர்களும் அதிகார அரசியலில் ஆட்சிப்பீடம் ஏறுவதற்காக அப்பாவிகளான மக்களை இனரீதியாகச் சிந்திக்கச் செய்தனர். அதனால் ஆங்கில மிசனறிக்கல்லூரிகளில் கல்விகற்று

அதியுயர் உத்தியோகங்களைப் பெற்று இருந்த அதிகாரிகளுக்கு எதிராகவும் அவர்களது இனவாதத் தூண்டுதல்கள் அழுத்தத்தை ஏற்படுத்தின. இதற்குத் தூபமிடுவது போல் அமைந்த தாய்மொழிக்கல்வி, தமிழர் கல்வி, சிங்களவர் கல்வி என இனங்காணப்பட தேசிய கல்வி என்ற எண்ணக்கரு சிதைவுபட்டுப் போனது. நல்ல நோக்கோடு கொண்டு-வரப்பட்ட தாய்மொழி மூலம் கல்வி போன்ற எண்ணக்கருக்கள் தமது கீழ்த்தரமான அரசியல் நோக்கங்களுக்குப் பயன்பட்டதால் அந்த எண்ணக் கருவிலேயே சந்தேகம் வரவைத்தது எனலாம். இந்நிலையில் தமிழ்க்கல்வி புறக்கணிப்புக்குள்ளானதுடன் அதன் புனிதத்துவமும் மாசுபடத் தொடங்கியது. இனவாத சிந்தனைக்குள் அகப்பட்டு தமிழ்க் கல்வி நிலை தடுமாறிநின்றது. இதன் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்-கைகள் தான் தமிழ்க்கல்வியின் சவால்களாக அமைந்தன எனலாம்.

## ஆசிரியர் கல்வி

தமிழ்க்கல்வியைப் பொறுத்தவரை பழைய பண்டிதர்களும், வித்துவான்களும், புலவர்களும் ஆற்றியபங்கை எவரும் இன்று மறுதலிக்க முடியாது. எமது இலங்கைப் பல்கலைக்கழகங்கள் பட்டதாரி-களை உருவாக்கத் தொடங்கியதும், பட்டதாரிகள் பலர் தமது அரை-வேக்காட்டுத் தனங்களைக் காட்டி, பண்டிதர்களையும், வித்துவான்-களையும், புலவர்களையும் கொச்சைப்படுத்தினார்கள். இதனால் அந்தக் கற்கை நெறிகள் படிப்படியாக இல்லாமல் போனது. ஆனால் பல்கலைக் கழகங்கள் அந்த வேலைகளை தாம் பாரமெடுத்து ஒழுங்காகச் செய்தனவா என்றால் அதுவும் நிகழவில்லை. “இன்று கருத்தை வெளிப்படுத்தினால் போதும் எழுத்துப் பிழைகளில் கவனம் செலுத்தத் தேவையில்லை” என்று பேராசிரியர்களே குறிப்பிடும் நிலை உருவாகி-யுள்ளது.

ஆசிரியர்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட விதமும் கண்டனத்துக்-குரியதாகும். தராதரப்பத்திரம் உள்ள பயிற்றப்பட்டோர் தராதரப்-பத்திரமற்ற ஆசிரியர்என்ற பெயரால் அறிமுகப்படுத்தப்பட்டனர், பயிலுனர்

ஆசிரியர், ஜனசக்தி ஆசிரியர், சமூர்த்தி ஆசிரியர், தொண்டர் ஆசிரியர் என்று ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்தநிலை வறுமை யொழிப்புக்கும் அரசியல் தேவைக்கும் என்று ஆகிப்போனதால், தரமானவர்களின் வளமான ஆற்றலை வகுப்பறைகளில் காணத்துடித்த மாணவர்களின் கற்றல் அவாவைப் பூர்த்தி செய்யக்கூடியவர்களாக ஆசிரியர்கள் இல்லாமையால் மாணவர்- ஆசிரிய உறவில் விரிசல்கள் ஏற்பட்டன. இன்னும் ஆசிரியர் தர நிர்ணயம் செய்வதற்கு ஒரு நிறுவனம் இல்லை என்ற நிலையே உள்ளது என்பது எழுத்தறிவு வீதம் உயர்நிலையில் உள்ள நாடொன்றுக்கு பொருத்தமில்லை எனலாம்.

## பாடசாலைக்கல்வி

தரம் ஒன்று தொடக்கம் தரம் ஐந்துவரை ஆரம்பப்பிரிவு எனவும், தரம் 6ல் இருந்து 13வரை இடைநிலைப் பிரிவு எனவும் சுட்டிக்காட்டி கற்பித்தல் தொழிற்பாடு நடைபெறுகிறது. தரம் ஐந்தில் நடைபெறும் புலமைப்பரிசில் பரீட்சையின் முடிவுகளின் பிரகாரம் தாய்மொழி தமிழில் 00 புள்ளி எடுத்தோர் 9.5% த்தினராகும். அதாவது ஐந்து ஆண்டுகள் தனது தாய்மொழியில் கற்ற மாணவன் ஒரு புள்ளியையும் பெறமுடியவில்லை. அதேபோல் அதே புலமைப்பரிசில் பரீட்சையில் 13.7% மான மாணவர்கள் கணிதத்தில் 00 புள்ளிகள் பெற்றுள்ளனர். குறிப்பிட்ட தேர்ச்சி மட்டத்தை அடைந்தோர் 37% த்தினர் வரைதான் போன்ற தரவுகள் எமது கற்றல் கற்பித்தலில் ஏதோ தவறுள்ளது என்பதைச் சுட்டிக்காட்டும் தகவல்கள். ஆனால் இது சம்பந்தமான பரிகார நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படாமை பாரிய சவாலாகவே உள்ளது.

க.பொ.த.(சா.த) பரீட்சையில் ஏறத்தாழ 550,000 மாணவர்கள் வருடம் தோறும் தேற்றுகிறார்கள். இவர்களில் 224,000 பேர் வரைதான் க.பொ.த.(உ.த.) வகுப்புக்களில் நுழைகின்றனர். ஏனையவர்களின் நிலை என்ன? பதினொரு ஆண்டுகள் கல்விகற்ற பின் குறைந்தபட்ச தேர்ச்சி மட்டத்தை 50% மாணவர்கள் பெறவில்லை என்பது பாரிய சவாலாகும். இந்த இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட மாணவர்கள் க.பொ.த.(உ.த.)

பரீட்சையில் அமர்கின்றனர். அவர்களில் 12,500 பேருக்கு மாத்திரம்தான் பல்கலைக்கழக வசதியுள்ளது. அதாவது 5% மான மாணவர்களுக்குத் தான் பல்கலைக்கழக வசதியெனில் எமது பாடசாலைக் கல்வியில் மாணவர் நம்பிக்கை இழப்பதில் தவறு இல்லைத்தானே என்ற கருத்து நிலவுகின்றது. வேறுவார்த்தையில் சொல்வதானால் 13 ஆண்டுகள் கல்விகற்றபின் 18 வயது நிரம்பிய பல இளசுகளை தீவிரவாதத்துடன் இணைப்பதாகவே கல்வி அமைப்புக் காணப்படுகிறது எனலாம்.

## பல்கலைக்கழகங்களும் அனுமதியும்

இலங்கைப் பல்கலைக்கழகங்கள் இன்று பன்னிரண்டு இயங்குகின்றன. 1970 களில் தரப்படுத்தல் மூலம் மாணவர் அனுமதி வழங்கப்படல் வேண்டும் என்ற முறைமை அறிமுகப்படுத்தப்பட்டதுடன் தமிழ்க் கல்வியில் பாரிய பிரச்சினைகள் ஏற்பட்டன. பல தமிழ் இளைஞர்கள் தமது பொருளாதாரத்தின் ஆணிவேராக இருந்த கல்வியைத் தம்மிடம் இருந்து பறிக்க முயற்சிக்கப்படுவதாக உணர்ந்து போராட்டங்களில் இறங்கினர். அக்காலத்தில் கல்வி அமைச்சராக இருந்த பதியுதின் முகமட் அவர்கள் குறிப்பிடும்போது "மிக விரைவில் எல்லா மாவட்டத்திலும் தரமான பாடசாலைகள் வந்துவிடும். எனவே தரப்படுத்தல் ஐந்தாண்டுகளில் இல்லாமல் போகலாம்" என்றார். இன்று 33 ஆண்டுகள் முடிவடைந்தும் மாவட்டங்கள் தோறும் தரமான பாடசாலைகள் பௌதீக பண்பாட்டு வளத்துடன் பயனுறுதியுள்ள பாடசாலைகளாக வளர்ந்துள்ளனவா எனின் "இல்லை" என்பதே விடையாகக் கிடைக்கப்பெறும்.

கல்வித் தரமானவர்கள் தரமான புள்ளிகளைப்பெற்று பல்கலைக்கழகத்துக்குள் நுழைந்த போது கல்வித்தரமற்றவர்கள் குறைந்த புள்ளிகளுடன் நுழைந்தனர். இவர்களுக்கிடையே பாரிய வேறுபாடுகள் காணப்பட்டன. அதேவேளை தரமான புள்ளிகள் பெற்ற பலர் பல்கலைக்கழகத்துக்குள் புகக்கூடிய புள்ளிகள் பெற்று இருந்தும், பல்கலைக்கழக அனுமதி கிடைக்காமையால் ஏமாற்றமடைந்தனர். இவர்கள் தென்பகுதியிலும், வடபகுதியிலும் பாரிய எதிர்ப்பியக்கங்களைத் தோற்றுவித்ததுடன்

அரச இயந்திரத்துடன் ஒத்துளையாமையைக் கடைப்பிடித்தமையால் நாடு பல கோடிக்கணக்கான ரூபாக்களையும், பல கோடிக் ரூபா பெறுமதியான மனிதசக்தியையும் இழந்தது. இன்றுவரை இந்தப் பிரச்சினைக்குச் சரியான தீர்வின்மையால் இது மாணவருக்குப் பாரிய சவாலாகவேயுள்ளது.

## இடைவிலகல்

பாடசாலையில் சேரும் மாணவர்களில் தரம் ஐந்துக்குவரும் மாணவர்களில் 7% த்தினர் இடைவிலகிவிடுகிறார்கள். தரம் 11 க்கு வரும் மாணவர்களில் 13% மாணவர்கள் இடைவிலகிவிடுகின்றனர். இந்த இடைவிலகல் வீதாசாரம் மாவட்டத்துக்கு மாவட்டம் வேறுபட்டுக் காணப்படுகின்றது. குடும்ப வறுமை, சிறுவர் உழைப்பு போன்ற காரணங்கள்தான் இடைவிலகலுக்கான அடிப்படை என்று தெரிந்தும் இந்தச் சவாலை எம்மால் சமாளிக்க முடியவில்லை.

## பாடசாலை செல்லாமை

புதிய கல்வி மறு சீரமைப்பு, 14 வயதுக்குட்பட்டோர் யாவருக்கும் கட்டாய ஆரம்பக்கல்வி என்று குறிப்பிட்டுள்ளது. இதை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு கிராமசேவகர்கள் உறுதி செய்ய வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நமது நாட்டில் தெருவோரத் தொழிலாளர்களாகவும், தனியார் பேரூந்து நடத்துனர்களாகவும், வியாபார உதவியாளர்களாகவும், சிறுவர் துர்ப்பிரயோகத்திற்கு அடிமையானவர்களாகவும், வீட்டு வேலைக்காரர்களாகவும் எத்தனை சிறார்கள் தம் சொந்த இளமைக்கல்வி வாழ்வைத் தொலைத்துவிட்டு நிற்கின்றனர் என்பதை நாடறியும். இந்தச் சவாலுக்கு நாம் கண்ட பரிகாரம் என்ன?

## கல்வியும் தொழில்வாய்ப்பும்

இந்தியாவை எடுத்து நோக்கின் அங்கு கல்விகற்க விரும்பும் எந்தப் பிள்ளைக்கும் அவ் வாய்ப்பு இருக்கிறது. ஆனால், கல்வி கற்ற யாவருக்கும் வேலை உத்தரவாதமில்லை. எனவே, பல்கலைக்கழக கல்வியை முடித்த பலர் முச்சக்கர வண்டி ஓட்டுனர்களாகவும், சுற்றுலா வழிகாட்டிகளாகவும் வேலை செய்கிறார்கள். அவர்கள் எத்தகைய தொழிலையும் செய்யத் தயாராக இருக்கிறார்கள். "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற நிலையில் தமது நாட்டின் சனத்தொகையோடு ஒப்பிடும்போது, தமக்கு வேலை கிடைப்பதில் உள்ள கஷ்டங்களை விளங்கிக் கொள்கின்றனர். ஆனால் இலங்கையில் நிலைமை சற்று வித்தியாசமாக இருக்கின்றது. பல்கலைக்கழகம் வரை இலவசக்கல்வியைத் தொடர்ந்த பலர் எந்த நாட்டுப்பற்றும் இல்லாமல் தம் சுயநலத்துக்காக நாட்டை விட்டு வெளியேறி விட்டனர். இங்கு இருக்கும் பலரும் தரமான வேலைகள் தேடித் தம் இளமைக்காலத்தையே செலவழித்து விடுகிறார்கள். கல்வி தொழில், வாய்ப்புக்களுடன் தொடர்புபட்டதாக இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் 1970 களில் அன்றைய நிதி அமைச்சராக இருந்த கலாநிதி என்.எம். பெரேரா அவர்களால் பல்கலைக்கழகத்தில் பாடநெறிகள் ஆரம்பிக்கப்பட்டன. "B. Dev." என்று அந்தப் பட்டம் அழைக்கப்பட்டது. பெருந்தோட்டமும் மதிப்பீடும், பொது நிதியும் வரிமதிப்பும், மீன்பிடிப்பும் விவசாயமும் என்று பல்வேறு பெயர்களில் அழைக்கப்பட்ட அப்பாட நெறிகள் எல்லாம் பின்வந்த அரசியலாளர்களின் தூர நோக்கின்மையால் நிறுத்தப்பட்டன. அதன் விளைவு பட்டதாரிகளை உற்பத்தி செய்யும் நிலையங்களான பல்கலைக்கழகங்கள் எந்த விதமான நோக்கமும் இல்லாமல் உற்பத்தியை மேற்கொள்கின்றன. இது சம்பந்தமான தெளிவான விளக்கத்துடன் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவோ உயர்கல்வி அமைச்சோ கூட செயற்படுவதாக இல்லை.

## விரக்தி நிலை

இலங்கையில் கல்வி கற்ற வகுப்பினர் தற்கொலையில் முன்னணியில் நிற்கின்றனர் என்ற புள்ளிவிபரம் எமது கல்வி முறையிலும், எமது சமூக அரசியல் பொருளாதார நடவடிக்கைகளிலும் பற்றுறுதியில்லை என்பதைக் காட்டும் சுட்டியாகும். அரசியல் தலையீடு அபரிமிதமாகக் காணப்படுவதால் தரமானவர்கள் தரமான பதவிகளைப் பெறுவதில்லை. பெற்ற பதவிகளைக் கூடச் சரியாக நடைமுறைப்படுத்த முடியாமைக்கு அரசியல் தலையீடுகளே காரணங்களாகும். மனச்சாட்சிப்படி வாழ நினைப்பவர்கள் தற்கொலைக்குத் தள்ளப்படும் நிலைதான் இலங்கையில் உள்ளது என 1990 ஆம் ஆண்டு இளைஞர் ஆணைக்குழு அறிக்கை குறிப்பிடுகின்றது. இச்சவாலை எப்படி நாம் சமாளிக்கப் போகின்றோம்.

## இன்றைய இலங்கை

எமது இலங்கைத் தீவு நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டது. பெரிய கண்டமேடைகளையும் கடலடித்தள மேடைகளையும் கொண்டது. போதிய மீன்வளம் எம் கடலெல்லையில் உண்டு. ஆனால் நாம் மீன் தேவைக்கு வங்காள தேசம், மாலைதீவு போன்ற நாடுகளை நம்பியே இருக்கிறோம் என்ற நிலையை யார் சிந்தித்துப் பார்க்கின்றனர்.

இலங்கை 103 நதிகளையும், என்றும் வற்றாத 34 பேராறுகளையும் கொண்டநாடு. நல்ல மண் வளம், நல்ல நீர் வளம், நல்ல மனித வளம் உள்ள நாடு. ஆனால் அடுத்த நேர அரிசிக்கு அடுத்த கப்பலை எதிர்பார்க்கிறோம் என்று 1972 ஆம் ஆண்டு ஐந்தாண்டுத்திட்ட அறிக்கையில் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்க அவர்கள் குறிப்பிட்டு 32 ஆண்டுகள் கடந்தும் அந்த ஆதங்கத்தில் அடங்கியுள்ள தேவையை நம்மால் நிறைவு செய்ய முடிந்ததா? அப்படியானால் நாம் என்ன செய்யப் போகின்றோம்?

எமது நாட்டில் உள்ள கனியவளங்கள் எல்லாம் பயன்படுத்தப்பட்டால் எமது கைத்தொழில் துறை உச்ச வளர்ச்சி அடையும். ஆனால் நாம் அதில் அக்கறை காட்டவில்லை. "இல்மனைற்" போன்ற பெறுமதி

மிக்க கனியங்களை எல்லாம் மூலப்பொருட்களாகவே வெளிநாடுகட்கு அனுப்புகிறோம். எமது நாட்டில் 17% த்தினருக்கு மேல் வேலையற்றோர் இருக்க வேற்று நாட்டவருக்கு வேலை வாய்ப்பும், சந்தை வாய்ப்பும் தருவோராக நாம் மாறி இருக்கும் வேதனை தரும் சவாலை எவ்வாறு முறியடிக்கப் போகின்றோம்.

## நாங்கள் எங்கே போகின்றோம்

எழுத்தறிவு வீதம் 90% உள்ள நாடு இலங்கை என்று பெருமை பேசுகின்றோம். அப்படியான நாட்டில் இனத்தின் பெயரால், மதத்தின் பெயரால் யுத்தம் ஏன்? இந்த நிலையை ஒப்பீட்டு நோக்கில் எமது எழுத்தறிவு வீதத்தில் ஏதோ தவறு இருக்கிறது அல்லது எமது சிந்தனை முறையில் ஏதோ தவறுள்ளது. எது சரியானது என்பதைக் கண்டு கொள்ள வேண்டும். எமது நாடு தெற்காசியாவில் கல்வியறிவுள்ள நாடு என்கிறோம். கல்வி அறிவு அதிகமுள்ள நாடு அபிவிருத்தி அடைந்திருக்கும்; ஸ்திரமான பொருளாதார நிலை இருக்கும்; அரசியல் கெடுபிடிகள் குறைந்திருக்கும்; அன்பும், அகிம்சையும் வாழ்வு பெற்றிருக்கும்; விழுமியங்களும் நியமங்களும் பேணப்பட்டு இருக்கும்; மனிதனை மனிதன் மதிக்கும் பண்பு சிறப்புற்று இருக்கும்; ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்து பரஸ்பர முடிவெடுத்து நாட்டுப்பற்றுடன் நடக்கும் செயல் உயர்வடைந்திருக்கும். ஆனால் எதுவுமே எம்மிடம் வளரவில்லை. மாறாக முடிவற்ற யுத்தத்தினாலும் பாழ்பட்ட குரோத எண்ணங்களினாலும் சிக்கித் தவிக்கிறோம். இச் சவால்களுக்கு எமது கல்வி நிறுவனங்களும், கல்வித் திட்டங்களும் எத்தகைய முடிவை முன்வைக்கப் போகின்றன என்பது தான் எஞ்சியுள்ள சவாலாகும்.

## உசாத்துணைகள்

1. *1972ம் ஆண்டு ஐந்தாண்டுத் திட்ட அறிக்கை*, அரசாங்க வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.

2. *1990ம் ஆண்டு இளைஞர் ஆணைக்குழு அறிக்கை*, அரசாங்க வெளியீட்டுத் திணைக்களம், கொழும்பு.

3. *2000/2001ம் ஆண்டு பரீட்சைத் திணைக்கள புள்ளிவிபர அறிக்கைகள்*, இலங்கைப் பரீட்சைத் திணைக்களம், கொழும்பு.

4. *ஆரம்ப வகுப்புக்களில் மொழிக்கல்வி அறிவைப் பாதிக்கும் காரணிகள் - ஆய்வறிக்கை 5 (1997)*, ஆய்வும் பயிற்சியும் பிரிவு, கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு, திருகோணமலை.

5. கன்னங்கர, சி. டபிள்யூ. டபிள்யூ. (1945), *கல்வி அறிக்கை*, அரசாங்க அச்சகம், கொழும்பு.

# கல்வி உளவியலும் வகுப்பறையும்

**உலகநாதர் நவரத்தினம்**

B.A., PGDE, M.Ed. (S.L.), M.Ed. (Aus.)

பணிப்பாளர், அசிரியவாண்மை விருத்தி நிலையம், தேசிய கல்வி நிறுவகம்

---

## அறிமுகம்

முறைசார் கல்விமுறையில் கற்போனின் செயற்பாடுகள் நிகழும் களமாக விளங்குவது வகுப்பறையாகும். வகுப்பறையில் நிகழும் செயற்பாடு-களின் தரத்திலேயே கற்போனின் ஆற்றலானது விருத்தியுறுகின்ற தெனலாம். வகுப்பறைச் செயற்பாடுகளில் பிரதான முகவராக விளங்குபவர் ஆசிரியர் ஆவார். ஆசிரியரின் செயற்பாட்டுத் திறனிலேயே கற்போனின் செயற்றிறன் ஆற்றல் வெளிக்கொணரப்படுகின்றது. ஆசிரியரும் கற்போனும் தனித்தனி ஆட்களாகச் செயற்பட்டாலும், இருவருங் கூட்டாக இயங்குவதிலேயே கற்றலின் வெற்றி தங்கியுள்ளது. ஆசிரியருக்கும் கற்போனுக்குமிடையே இடைவெளி அதிகரிக்கும்போது தரமான, வளமான கற்றல் நிகழ்வதற்கான வாய்ப்புக்கள் குறைவடையும். ஆசிரியருக்கும், கற்போனுக்கும் இடையிலான தொடர்பு நெருக்கமாகும்போது கற்றல் சிறப்பாக நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு. இவ்வாறான நெருக்கமான தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு ஆசிரியருக்கு உதவுவது கல்வி உளவியல் சார்ந்த தேர்ச்சியாகும்.

## கல்வி உளவியல்

ஆசிரியர்களின் வாண்மை விருத்தியில் கல்வி உளவியல் பிரதான இடத்தை வகிக்கின்றது. உளவியல் என்பது உளம் பற்றிய ஆய்வாக விபரிக்கப்பட்டபோதும் கல்வி உளவியலானது அதற்கே உரித்தான விடயங்களில் கரிசனை கொண்டுள்ளது. பொதுவாகக் கல்வி உளவியல் என்பது பாடசாலை மட்டத்தில் நிகழும் கற்றல், கற்பித்தல் செயன்முறையைச் சார்ந்தது என விளக்கமளிக்கலாம். ஆனால், அதற்கப்பால் விருத்தி கற்றல் ஊக்கல் போதனை ஆகியவற்றுடன் இணைந்த அனைத்துச் செயற்பாடு-களுக்கும் பயன்படுத்தப்படும் உளவியல் செயற்பாடே கல்வி உளவியல் எனப்படும். "கவரும், றோமிங்கும் கல்வி உளவியல், மனித விருத்தி, தனியாள் வேறுபாடுகள், அளவீடு, கற்றல் ஊக்கல் கல்வி தொடர்பான மனிதப்பார்வை ஆகியவற்றோடு தரவுகளையும் கோட்பாடுகளையும் உள்ளடக்கியது என விபரிக்கின்றனர். இந்தப் பின்னணியில் கல்வி உளவியல் தொடர்பான கற்கை, கற்றல் கற்பித்தலின் மூலமாக விளங்கும் மாணவர் சார்பானதென்பது இங்கு குறிப்பிடப்படவேண்டியதாகும்.

## இயங்குநிலை வகுப்பறை

கல்வி உளவியலின் அடிப்படை எண்ணக்கருவாக விளங்குவது கற்பித்தல் என்றால் என்ன என்பதனை விளங்கிக்கொள்ளலாகும். கற்பித்தல் தொடர்பான அடிப்படைகளை உரியவாறு விளங்கிச் செயற்படுவதால் மட்டுமே வகுப்பறையை இயங்குநிலையில் வைத்திருக்கலாம். இயங்குநிலை வகுப்பறை என்னும்போது, கற்போன் எப்போதும் கற்றலில் ஆர்வம் காட்டு-பவனாகவும் புதியனவற்றைத் தேடி இயங்கத் துடிப்புள்ளவனாகவும் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

## கற்பித்தல் என்றால் என்ன?

பொதுவாக கற்பித்தல் என்றால், ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கையால் தனியாகவோ, அல்லது கூட்டாகவோ மாணவர்களைக் கற்கத் தூண்டுவதாகும். கற்பித்தல் என்பது செயன்முறை சார்ந்த செயற்பாடாகும். இதில் செயலும் இடம்பெறுகிறது. கற்பித்தலில் ஈடுபடும் ஆசிரியன் கற்றல் செயன்முறையின் நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துவதன் வாயிலாகவே கற்பித்தலை விளைதிறன் உள்ளதாக்கலாம்.

கற்பித்தலென்பது ஆட்களுக்கிடையே நிகழுகின்ற செயன்முறை-யாகும். ஆசிரியனும் கற்போனும் முறைசார் அடிப்படையிலான தொடர்-பாட்லுக்கு உள்ளாகின்றனர். இத்தொடர்பாடல் வினைத்திறன் உள்ளதாக அமையும்போது கற்றலானது பெறுபேறுடையதாக விளங்குகின்றது. இங்கு தொடர்பாடலால் இரு பகுதியினருக்குமிடையே ஊடாட்டம் நிகழ்கின்றது. இவ்வூடாட்டத்தினால் இரு பகுதியினரும் பயன்பெறுகின்றனர். ஆசிரியர் கற்போர் பற்றியும், கற்போர் ஆசிரியர் பற்றியும் விளக்கமும், தெளிவும் பெற வாய்ப்புண்டு. அண்மைய ஆய்வுகளின் அடிப்படையில் ஆசிரிய வாண்மைக் கூறுகளிலொன்றாக ஆட்களுக்கிடையிலான தொடர்பு விளங்குகின்றது.

கற்பித்தல் என்பது காரணம் தழுவியதாகும். காரணம் தழுவியதாக இருக்கும்போது காரியம் சார்பாகவும் சிந்திக்கப்படுகின்றது. காரியம் இல்லாமல் கற்பித்தல் இடம்பெறமாட்டாது. காரணகாரியத் தொடர்பு இருக்கும்போது, வகுப்பறைக் கற்பித்தலானது குறிக்கோள் தழுவியதாகவும் அமைந்து விடுகின்றது. பொதுவாக வகுப்பறைக் கற்பித்தலானது, இருவழி தழுவியதாக அமையும்போது சொல் சார்ந்த, சொல்சாரா முறைகளில் தொடர்பாடல் நிகழுகின்றது. எனவே வகுப்பறையின் இருவழிச் செயன் முறையில் சொல் சார்ந்த சொல் சாராத தொடர்பாடலும் கற்றல் கற்பித்தலுக்கு இன்றியமையாததாக விளங்குகின்றது.

## ஆசிரியன் கற்பித்தலும் போதனையும்

ஆசிரியன் கற்பித்தல், போதனை ஆகிய எண்ணக்கருக்கள் கற்றல் தொடர்பாகச் சிந்திக்க வேண்டியவையாகும். ஆசிரியன் என்பவர் வகுப்பறைக் கற்பித்தலில் மையமானவராகவும், வழிப்படுத்துபவராகவும், இயக்கத்திறன் உடையவராகவும் காணப்படுகின்றார். ஆசிரியர்களின் தனிப்பட்ட கற்பித்தல் நடவடிக்கைகள் மாணவர்களின் அடைவுகளுடன் தொடர்புபட்டதாகக் காணப்படவில்லை எனக் குறிப்பிடுகின்றனர். ஆசிரியர்களின் தனிப்பட்ட நடத்தைகள் பிள்ளைகளின் கற்றலில் தாக்கம் விளைவிப்பதில்லை என்ற புதிய சிந்தனையொன்று காணப்படுகின்றது. ஆசிரியர்களின் பண்புசார் விருத்தி கற்றல் அனுபவத்தின் ஊடாக விருத்தியுறுவதாக நம்பப்படுகின்றது.

ஆசிரியர்களின் கற்பித்தல் நடத்தையானது கற்போனின் அடைவு மட்டத்தில் தாக்கத்தை விளைவிப்பதாக அறியக்கிடக்கின்றது. கற்பித்தல், நடத்தையிலும் பார்க்க இயக்கத்திறன் சார்ந்ததாக இருக்கும்போது கற்பித்தல் விளைதிறன் உடையதாக காணப்படுகின்றது.

போதனை முறைமை வகுப்பறைக் கற்பித்தலில் முக்கியபங்கை வகிக்கின்றது. போதனை முறையில் ஏற்படுத்தப்படும் சிறிய மாற்றம் மாணவர்களின் அடைவுகளில் பெரும் தாக்கத்தை உருவாக்குகின்றது. முழு வகுப்பு அடிப்டையிலான போதனையிலும் பார்க்க, குழு அடிப்படையிலான போதனை பயனுறுதி வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

## கற்போன் தொடர்பான அறிவு

கற்றல், கற்பித்தல் செயன்முறையின் உயிர்நாடியாக விளங்குபவர் கற்போன் ஆவர். கற்போன் தொடர்பான பலவகை நிலைகளைச் சரிவரப் புரிந்து செயற்படுவதாலேயே, கற்பித்தல் வினைத்திறன் உடையதாக அமைய முடியும். குறிப்பாக வகுப்பறையிலுள்ள கற்போனின் தேவைகள் இனங்காணப்படுதல் முக்கியமாகும். தேவையை அறிந்து அதற்கு ஏற்பச் செயற்பட்டாலேயே கற்பித்தல் வெற்றியளிக்க முடியும். கற்போனின்

நடத்தைகள் தொடர்பான விடயங்களை அறிவதற்கான ஆற்றலும் ஆசிரியர்களுக்கு இன்றியமையாததாகவுள்ளது. அத்தோடு கற்போனின் விருத்தி தொடர்பான அறிவும் ஆசிரியர்களுக்கு அத்தியாவசியமானதாகும். வகுப்பறையில் இருக்கின்ற கற்போனின் முதிர்ச்சி மட்டத்துக்கு பொருத்தமான கற்பித்தல் செயற்பாடுகளை வழங்குவதற்கு இது பெரிதும் உதவும்.

கற்போனின் கற்றலில் ஊடகமாக விளங்குவது மொழியாகும். கற்போனின் மொழி தொடர்பான விருத்திக்கு ஏதுவான காரணிகளை இனங்கண்டு, அவற்றை விருத்தி செய்வதற்கான அடிப்படைகளை ஆசிரியர்கள் அறிந்திருத்தல் அவசியமாகும். அறிகை வாதக் கோட்பாட்டில் மொழித் திறனானது ஒரு கட்டமைப்பு அடிப்படையில் அறிகைப் புலத்தில் நிகழ்வதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக அறிவு வகுப்பறைக் கற்பித்தலில் ஆசிரியருக்குப் பெரிதும் உதவும்.

வகுப்பறையில் கற்போனின் திறன்களில் பல்வகைத் தன்மைகள் காணப்படுகின்றன. மீத்திறன்கூடிய மாணவர்களும், மீத்திறன் குறைந்த மாணவர்களும் வகுப்பறையில் இருக்கும்போது, ஆசிரியரின் செயற்பாடு சவால்கள் நிறைந்ததாக அமைகின்றது. அத்தோடு பல்வகைக் குறைபாடுகள் உடையோரும் வகுப்பறையில் இருப்பர். அவர்களும் கற்றலில் ஈடுபடும் வகையில் கற்றல் - கற்பித்தல் செயன்முறை அமைதலை உருவாக்கும் பணியும் ஆசிரியர்களைச் சார்ந்ததாகும். இவர்களின்பால் கவனம் செலுத்தப்படாத விடத்து, இன்றைய "எல்லோருக்கும் கல்வி" என்பது மிகமிகத் தூரத்தில் உள்ளதாகவே கொள்ளப்படுகின்றது.

## வகுப்பறைக் கற்பித்தல் செயன்முறையை விளங்கிக்கொள்ளல்

கல்வி உளவியலின் அடிப்படை அமிசமான கற்றல் செயன்முறையை விளங்கிக்கொள்வதில் தான் வகுப்பறைக் கற்பித்தலின் வெற்றி தங்கியுள்ளது. குறிப்பாக நடத்தைவாதம் அறிகைவாதம் தொடர்பான சிந்தனைகள் வகுப்பறைச் செயற்பாடுகள் சிறப்புற நிகழ்வதற்கு உறுதுணையாக அமைகின்றன. கோட்பாட்டு அடிப்படையில் அமைந்த அமிசங்களை

வகுப்பறைப் பிரயோகத்துக்கு எவ்வாறு பயன்படுத்தலாமென்பது முக்கியமானதாகும். உளவியல் சார்ந்த கோட்பாடுகளைக் கோட்பாட்டு அடிப்படையில் கற்பதால் வகுப்பறைக் கற்பித்தல் மேம்பாடடையும் கற்போனின் சிந்தனை விருத்தி பெறலும், பிரச்சினை விடுவித்தலும் கற்றலின் பாற்பட்டதாகும். கற்போனில் இத்திறன்கள் வகுப்பறை மட்டத்தில் உருவாக்கப்பட வேண்டியதாகும். வெறுமனே உருப்போடுதலுக்கான வகுப்பறைகள் கற்போனில் மாற்றத்தை ஏற்படுத்துவதில்லை.

## போதனை இயக்கம்

கற்றல் - கற்பித்தல் செயன்முறையில் போதனை இயக்கம் முக்கியமானதாகும். போதனைக்கு அடிப்படையாக அமைவது குறிக்கோள் அல்லது நோக்கமாகும். போதனையானது குறித்த இலக்கை அடையப்பெறுவதாக அமைய வேண்டும். இலக்கை அடைவதற்கு போதனை நுட்பம் இன்றியமையாததாகும். கற்றலானது வெட்டைவெளியில் நிகழுவதில்லை. எனவே கற்றலுக்கு பொருத்தமான சூழலை ஆக்கிக்கொடுப்பதன் வாயிலாகவே வகுப்பறைச் செயற்பாடுகள் பயனுறுதி வாய்ந்ததாக அமையும். வகுப்பறையை போதனை விளைதிறன் ஆக்குவதற்கு வகுப்பறை முகாமைத்துவம் முக்கிய கூறாக அமைகின்றது. சரியானமுறையில் வகுப்பறையைக் கட்டுப்படுத்துவதற்கான நுட்பத்தைப் பயன்படுத்துவதன் வாயிலாக இதனை அடையப் பெறலாமென அறிய வந்துள்ளது.

## கற்போனின் அறிவையும் திறனையும் கணிப்பிடுதல்

கல்வி உளவியலின் அடிப்படைக் கூறுகளிலொன்றாக கணிப்பீடு விளங்குகின்றது. சரியானமுறையில் கணிப்பீட்டை மேற்கொள்வதன் வாயிலாகவே, கற்பித்தல் நோக்கத்தை கற்போன் அடைகின்றானா? என்பது அறியக் கூடியதாக இருக்கும். கற்போனின் அறிவையும், திறனையும் வகுப்பறையில் கணிப்பிடும் திறன் ஆசிரியர்களுக்கு அவசியமாகும். பொருத்தமான கணிப்பீட்டு முறைகளைப் பயன்படுத்துவதால், மாணவர்களின் கற்றலுக்கு பொருத்தமான பின்னூட்டலை வழங்கமுடியும்.

## முடிவுரை

வகுப்பறை என்பது துடிப்புள்ள பிள்ளைகள் வாழும் இடமாகும். இதனைக் கொண்டு நடத்துபவர் ஆசிரியர். ஆசிரியர் கற்போன் தொடர்பான உளவியல் அடிப்படையில் சிந்தித்துச் செயலாற்ற வேண்டியவராய் உள்ளார். எனவே வகுப்பறை தொடர்பான அமைப்பையும் அது கற்போனின் உள்ளத்தில் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தையும் அறிவதோடு, கற்போன் சிந்தனையும், நடத்தை, கற்றல் - கற்பித்தல் தொடர்பான உளவியல் ரீதியான நோக்கும் ஆசிரியரிடம் இருப்பதால் மட்டுமே வகுப்பறை விளைதிறன் உள்ள களமாக அமைய முடியும்.

# மாற்றங்களை முகாமை செய்தல்

**தையல்முத்து தனராஜ்**
B.A., PGDE, PGDEM, M.Ed., M.B.A.
பணிப்பாளர், தமிழ்த்துறை, தேசிய கல்வி நிறுவகம்

---

## அறிமுகம்

"மாற்றம்" என்னும் சொல்லைத் தவிர மற்றவை யாவும் மாறிக் கொண்டுதான் உள்ளன. மனித குலம் தோன்றியது முதல் மாற்றங்களுக்கு முகம் கொடுத்து வந்த போதிலும் கடந்த சில தசாப்தங்களைப் போல் என்றுமே இத்தனை விரைவான மாற்றங்களுக்கு முகம் கொடுத்ததில்லை. இன்று புத்தம் புதிதாக இருப்பவை சில நாட்களிலேயே பழங் கதையாய்ப் போய்விடுமளவுக்கு இன்று மாற்றங்கள் அத்தனை விரைவாய் நிகழ்-கின்றன. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பவியலில் (ICT) அண்மைக்-காலமாக ஏற்பட்ட அதீத வளர்ச்சியும் அதன் விளைவான பூகோள மயமாக்கமும் தேசங்களின் எல்லைகளை அர்த்தமற்றவைகளாக ஆக்கி விட்ட நிலையில் உலகின் எங்கோ ஒரு மூலையில் நடைபெறும் மாற்றம் எம்மை வந்தடைய சில நாட்கள் அல்ல, சில மணித்தியாலங்களே போதுமானவையாக உள்ளன.

எனினும் மாற்றங்களை ஏற்றுக்கொண்டு அதனை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தல் அத்தனை எளிதான விடயமல்ல. மாற்றங்களை முகாமை செய்வதில் சிலர் வெற்றியடையும்போது சிலர் தோல்வி-

யடைகின்றனர். சிலர் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள தயக்கம் காட்டு-கின்றனர். குறிப்பாக தேவையான மாற்றங்களைக் கூட எதிர்த்து நிற்பவர்களாக கல்வித்துறையின் மீது குற்றம் சாட்டப்படுகிறது. அதற்கு உதாரணமாக "றிப் வான் விங்கிள்" கதையை நகைச்சுவையாகப் பலர் எடுத்துக் கூறுவர்.

இக்கட்டுரையானது மாற்றங்களின் இயல்பு, மாற்றங்களுக்கான தடைகள், மாற்றங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான சில மாதிரிகள் (models) ஆகியவற்றை அறிமுகஞ் செய்கிறது.

## மாற்றங்களின் இயல்பு

ஒழுங்கமைப்புகளின் ஏதாவது பகுதியை குறிப்பிடத்தக்க வகையில் திருத்தியமைப்பதை நாம் நிறுவன மாற்றம் என்கிறோம். அதேபோல தனியாள் ஒருவரின் நடத்தையிலும்கூட இவ்வாறான குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தலாம்.

மாற்றங்களை,

அ. படிப்படியான மாற்றங்கள் (Incremental)

ஆ. அடிப்படை மாற்றங்கள் (Fundamental)

என பாகுபடுத்தலாம். படிப்படியான மாற்றங்கள் மிகவும் மெதுவாகவும் தொடர்ச்சியாகவும் ஏற்படுகின்றன. ஆரம்பத்தில் இத்தகைய மாற்றங்கள் பெரிதாகத் தோற்றாவிடினும் நீண்டகாலத்துக்குப் பின்னர் மாற்றம் ஏற்பட்டிருப்பதை உணரமுடியும். இத்தகைய "பரிணாம" மாற்றம், மாற்றங்களினால் பாதிக்கப்படுபவர்களுக்கு சிரமங்களை ஏற்படுத்தாத காரணத்தினால் எதிர்க்கப்படுவதில்லை. அடிப்படை மாற்றங்கள் உடனடியான தாக்கங்களை ஏற்படுத்துவதால் நிறுவனத்தில் உள்ளவர்-களால் மாத்திரமல்லாது வெளியாரதும் கவனத்தை ஈர்க்கின்றன. இதனால் இம்மாற்றங்கள் பற்றிய கருத்துக்களை சம்பந்தப்பட்டவர்கள் முன்வைப்பதோடு சில சமயங்களில் எதிர்க்கவும் செய்கின்றனர். எமது

கல்வித் துறையிலும் அரசியலிலும் இவ்வாறு கொண்டுவரப்பட்ட பல "அதிரடி" மாற்றங்கள் பல கடுமையான எதிர்ப்புகளுக்கு உள்ளாகி-யுள்ளன.

வேறொரு வகையில் மாற்றங்களை முன்வினை மாற்றம் (Proactive) என்றும் எதிர்வினை (reactive) மாற்றம் என்றும் பாகுபடுத்தலாம். சூழலில் ஏற்படுகின்ற மாற்றங்களை அனுசரித்து முன்யோசனையுடன் மாற்றங்களை கொண்டுவருவதே முன்வினை மாற்றமாகும். இது தீர்மானம் மேற்கொள்ளுகின்ற ஆற்றலின் வெளிப்பாடாக அமையும். சூழலின் நிர்ப்பந்தம் காரணமாக எதிர்வினை மாற்றங்க்ள் கொண்டுவரப்படு-கின்றன.

## மாற்றங்கள் ஏன் எதிர்க்கப்படுகின்றன?

மாற்றங்கள் எதிர்க்கப்படுவதற்கு "பழக்கதோஷம்" தான் முதலா-வது காரணி எனக் கூறப்படுகிறது. நன்கு பழக்கப்பட்ட ஒன்றை மாற்றிக்கொள்ள நாம் பொதுவாக விரும்புவதில்லை. சாதாரண உணவுப் பழக்கமாகக் கூட அது இருக்கலாம். பல ஆய்வுகளுக்குப் பின் "கொக் கோகோலா" பானத்தின் சுவையில் சிறுமாற்றம் செய்தபோது, ஓர் அமெரிக்க நகரத்தில், அதற்கு எதிராக மக்கள் ஊர்வலம் போய் மாற்றத்தை முறியடித்தனராம்.

மாற்றங்களை எதிர்ப்பதற்கு "புலக்காட்சி"யும் ஒரு காரணி எனக் கூறப்படுகிறது. மாற்றங்கள் தீமையானவை என்னும் அபிப்பிராயம் சிலரிடத்தில் நிலவுகிறது. நிறுவனங்களில் மாற்றங்களைக் கொண்டு-வரும்போது தொழிற்சங்கங்கள் அவற்றை எதிர்ப்பதை இதற்கு உதாரணமாகக் கூறுவர். நிறுவன உரிமையாளர்கள் தொழிலாளர்களின் நலன்களில் சிறிதேனும் அக்கறையற்றவர்கள் என்னும் "தொழிற்சங்க புலக்காட்சி"தான் இதற்குக் காரணம் எனலாம்.

மாற்றங்களுக்குப் பின்னால் ஏதோ ஒளிந்து கொண்டிருக்கிறது (Fear of the unknown) என்னும் அச்சத்தினாலும் மாற்றம் எதிர்க்கப்படுகிறது. தமது சுதந்திரம் பாதிக்கப்பட்டு விடும்; தமது வருமானத்தில் குறைவு ஏற்பட்டு விடும்; பாதுகாப்பு இல்லாமல் போய் விடும்; தமது அந்தஸ்து பாதிக்கப்பட்டு விடும் எனப் பலர் அச்சமடைகின்றனர். அதன் விளைவாக மாற்றங்களை உடனடியாக எதிர்க்கத் தலைப்படுகின்றனர். இத்தகைய அம்சங்கள் களையப்படாத நிலையில் மாற்றங்களை நடைமுறைப்படுத்த முனையும்போது தோல்வி நிச்சயம் ஏற்படும்.

## மாற்றங்களின் செயன்முறை

மாற்றங்களை எவ்வாறு வெற்றிகரமாக அமுல்படுத்தலாம் என்னும் கேள்விக்கு விடைகாண பல ஆய்வுகள் நடைபெற்றுள்ளன; இன்றும் நடைபெறுகின்றன. அவற்றின் பயனாக பல்வேறு மாற்ற மாதிரிகள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றில் சில கீழே தரப்படுகின்றன.

மாற்ற செயன்முறை தொடர்பாக லெவின் (Kurt Lewin, 1951) முப்படி நிலை செயன்முறை ஒன்றினை முன்வைத்தார் :

UNFREEZE ⟶ MOVEMENT ⟶ REFREEZE

இதன்படி மாற்றங்களைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டுமெனில் முதலில் "உறைந்து"போயுள்ள தற்போதைய நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும். மாற்றத்துக்கு சாதகமான மனப்பாங்குகளையும், சூழ்நிலையையும் மாற்றத்தினால் பாதிக்கப்படப் போகின்றவர்களிடையே உருவாக்குதல் முக்கியமானது. அடுத்த படியில் புதிய மனப்பாங்குகளையும், நடத்தையையும் தோற்றுவிக்க வேண்டும். அதாவது விரும்புகின்ற மாற்றங்களை அறிமுகஞ் செய்தல் வேண்டும். மூன்றாவது படியில் புதிய மாற்றங்களை நிலைப்படுத்துவதுடன் மீளஉறுதிப்படுத்தப்படல் வேண்டும். புதிய கொள்கைகள், கட்டமைப்பு அல்லது நியமங்கள் மூலம் அறிமுகஞ் செய்யப்பட்ட மாற்றங்களை நிலைப்படுத்த முடியும்.

பிரெஞ், காஸ்ற், றோசென்வெய்க் (French, Cast, Rosenweig, 1985) என்போர் லெவினுடைய செயன்முறையையொட்டிய இன்னுமொரு மாற்ற செயன்முறையை முன்வைத்தனர் :

1. பிரச்சினையை இனங்காணுதல்;
2. தரவுகளைப் பெறுதல்;
3. பிரச்சினையை ஆய்வு செய்தல்;
4. செயற்பாடுகளைத் திட்டமிடல்;
5. அமுல்படுத்தல்;
6. நிலைப்படுத்தல்;
7. விளைவுகளை கண்காணித்தல்;
8. இச்செயன்முறையிலிருந்து மேலும் கற்றல்.

லெவினுடைய மாற்றமாதிரிக்கும் பிரெஞ்ச் முதலியோர் முன்வைத்த மாற்ற மாதிரிக்கும் சுமார் 35 வருட இடைவெளி உண்டு. எனினும், லெவினுடைய விரிவுபடுத்தப்பட்ட ஒரு மாதிரியாகவே பிரெஞ்ச் முதலி-யோரது மாதிரி விளங்குகிறது.

அண்மைக்காலமாக வேறு இரண்டு மாற்ற மாதிரிகள் முன்வைக்-கப்படுகின்றன. இவற்றில் முதலாவது RDDA Model (Robert G. Owens) எனப்படுகிறது. ஆய்வு, அபிவிருத்தி, பரப்புதல், ஏற்றுக்கொள்ளல் (Research, Development, Diffusion and Adoption) என்னும் நான்கு கட்டங்களைக் கொண்ட இம்மாதிரி கைத்தொழில் உலகில் பிரசித்தி பெற்றுள்ள போதிலும் கல்வித்துறையிலும் மாற்றங்களை ஏற்படுத்தும் போதும் கவனத்திற் கொள்ளத்தக்கதே. உதாரணமாக தேசிய கல்வியியல் கல்லூரிகளில் தற்போதுள்ள கலைத்திட்டம் திருப்திகரமான-தல்லவென வைத்துக்கொள்வோம். இதனை ஆய்வு மூலமே கண்டறிய முடியும். அத்துடன் கலைத்திட்டத்தில் செய்யப்படவேண்டிய மாற்றங்களை

பற்றிய ஆரம்ப அறிவையும் கூட ஆய்வு மூலமே நாம் அறிய வேண்டும். அடுத்த கட்டம் புதிய கலைத்திட்டத்தை விருத்திசெய்து பரீட்சிப்பதாகும். பரீட்சார்த்த கலைத்திட்டம் வெற்றியளிக்கும் என்னும் நம்பிக்கை ஏற்படின் சகல கல்வியியல் கல்லூரிகளுக்கும் புதிய கலைத்திட்டம் பரப்பப்படும். அதன் பின்னர் பின்னூட்டல் பெறப்பட்டு இறுதித் திருத்தங்களுக்குப் பின்னர் புதிய கலைத்திட்டம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அடுத்தது "ஈஸியர்" (Easier) மாதிரி எனப்படுகிறது. ஆறு ஆங்கிலச் சொற்களில் முதலெழுத்துக்களைக் கொண்டு இந்த ஈஸியர் என்னும் சொல் ஆக்கப்பட்டுள்ளது (Envision, Activate, Support, Implement, Ensure, Recognition - Hussey). மலேசியாவில் மகதிர் மொகமட் அவர்களும், சிங்கப்பூரில் லீ - குவான் - யு அவர்களும் தமது தேசங்களை மாற்றியமைப்பதில் வெற்றி கண்டவர்கள். அவர்கள் தமது தேசம் எவ்வாறு இருக்க வேண்டுமென **தரிசன நோக்கு**டையவர்களாக இருந்ததோடு மக்களை எழுச்சி பெறச் செய்து **ஊக்கு**வித்தனர். மேற்படி மூன்று செயற்பாடுகளும் வசீகரத் தலைமைத்துவத்தின் பண்புக் கூறுகளாகும். அடுத்த மூன்று கட்டங்களும் நிர்வாகம் தொடர்பானவை. **அமுல்நடத்தல்** என்பது திட்டமிடல், கொள்கைவகுத்தல், குறிக்கோள்களை நிர்ணயித்தல் ஆகியவற்றைக் கொண்டுள்ளது. **உறுதிப்படுத்தல்** என்பது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்லப்படுவதை கண்காணித்து கட்டுப்படுத்துவதைக் குறிக்கும். **அங்கீகரித்தல்** என்பது மாற்றத்தை ஏற்படுத்தியவர்களை கௌரவித்து மாற்றங்களை நிலைப்படுத்துவதாகும். மேற்கூறப்பட்ட தலைவர்கள் இவ்வாறான ஒரு செயன்முறையின் மூலமே தமது தேசத்தை வறுமையிலிருந்தும், அறியாமையிலிருந்தும் விடுவித்து பிறர் வியந்து போற்றுமளவுக்கு முன்னேற்றப்பாதையில் இட்டுச் சென்றனர்.

## மாற்ற முயற்சிகள் பல ஏன் தோல்வியில் முடிகின்றன?

மேற்கூறப்பட்ட மாற்ற மாதிரிகள் மாற்றங்களை எவ்வாறு வெற்றி-கரமாக அமுல்நடத்தலாம் என்பதற்கான அடித்தளத்தை வழங்கு-கின்றன. ஆனால் எமது அனுபவத்தில் மாற்றங்கள் பல தோல்வியிலேயே முடிவதைக் காணுகிறோம்.

வெற்றிகரமான மாற்றங்களுக்கான முதலாவது நிபந்தனை, மாற்றங்களின் தேவை உணரப்படவேண்டும். உள்ளக அல்லது வெளியக காரணிகள் மாற்றத்துக்கான தேவையை உந்தித் தள்ளுதல் வேண்டும். மாற்றங்களை வேண்டி நிற்கும் மக்களிடையே மாற்றத்தை முன்வைப்பது எளிதானது.

அடுத்து மாற்றங்களின்போது தீர்மானங்கள் தகவல்களின் அடிப்படையில் எடுக்கப்பட வேண்டும். அதாவது தனிநபர்களின் விருப்பு வெறுப்புகளுக்கு இடமளித்தல் கூடாது. அத்துடன் நிறுவனம் முழுமைக்-குமான சிறந்த விளைதிறன்மிக்க தொடர்பாடல் ஏற்படுத்தப்பட வேண்டும். ஒரு சிறுபகுதியில் மாற்றம் செய்யும்போது கூட அதன் தாக்கம் வேறு இடங்களில் உணரப்படலாம் என்னும் விளக்கம் இருக்க வேண்டும். மாற்றங்களில் ஈடுபடும் உறுப்பினர்களிடையே "வெற்றி - தோல்வி" அணுகுமுறை அகற்றப்பட வேண்டும். அதாவது ஒருவர் வெற்றி பெற வேண்டுமெனில் மற்றவர் தோல்வியடைய வேண்டும் என்னும் மனப்பாங்கு ஆரோக்கியமானதல்ல. இது நிறுவன வளர்ச்சிக்கு எதிர்மறையானது. இதற்குப் பதிலாக "வெற்றி - வெற்றி" என்னும் உடன்பாடான மனப்பாங்கு ஊக்குவிக்கப்பட வேண்டும். அத்துடன் மாற்றம் வெற்றிபெற சகல உறுப்பினர்களிடையேயும் பரஸ்பர நம்பிக்கை, அர்ப்பணிப்பு ஆகிய-வையும் முக்கியமானது.

மாற்றங்கள் தவிர்க்க முடியாதவை. அதுவும் மிகவும் வேகமாக மாறிக்கொண்டிருக்கிற இன்றைய உலகில் மாற்றத்துக்கு உட்படத் தவறும் நிறுவனங்கள் நிலைத்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், மாற்றங்களைப் பலரும் விரும்புவதில்லை. மாற்றங்கள் தமது அந்தஸ்தை

மாற்றிவிடும் என அவர்கள் அஞ்சுகிறார்கள். மாற்றங்கள் தீயவை என வேறு சிலர் தவறான புலக்காட்சிகளினால் மாற்றத்தை தடுக்க முயல்கிறார்கள். ஆனால். மாற்றங்கள் வந்தே தீருகின்றன. மாற்றங்களை முதலில் எதிர்ப்பவர்களும் பின்னர் அவற்றை ஏற்றுக்கொள்ளும் நிலை ஏற்படுகிறது.

பாடசாலைகள் மாற்றங்களிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. தேசிய கல்வி ஆணைக்குழு முன்மொழிந்த பல மாற்றங்கள் இன்று எமது கல்வி முறையில் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. வழமைபோல சில வெற்றிப்பெற்றுள்ளன. சில தோல்வியுற்றுள்ளன. தோல்விக்கான காரணங்கள் கண்டறியப்பட்டால் எதிர்காலத்தில் மாற்றங்களை நடைமுறைப்படுத்துவது மிகவும் இலகுவாக இருக்கும். முதலில் மாற்றங்களை அறிமுகப்படுத்தும்போது "மாற்றமுகவர்"களான ஆசிரியர்கள் அதற்கேற்ற வகையில் தயார்படுத்தப்படுகிறார்களா என்னும் வினாவுக்கு விடைதேடப் படவேண்டும். கல்வித்துறையில் எதிர்காலத்தில் கொண்டுவரப்படவுள்ள மாற்றங்களின் வெற்றிக்கு இவ்வினாவுக்கான விடை அடித்தளமாக அமையும்.

# விரிவடையும் தேவைகளுக்கேற்ப மாறிவரும் ஆசிரிய வகிபாகம்

**எம். எச். எம். ஹஸன்**
B.A., PGDE
செயற்திட்ட அதிகாரி, தேசிய கல்வி நிறுவகம்

---

## அறிமுகம்

கல்வி என்ற எண்ணக்கரு இன்று முன்னெப்போதுமில்லாத வகையில் பரந்த கருத்தில் நோக்கப்படுகின்றது. குருகுல காலத்தில் ஆசான்களின் தனியுரிமையாக இருந்த கல்வி இன்று எண்ணற்ற ஊடகங்களால் வழங்கப்படுகின்றது. உலகில் தனது நிலையை உணர்ந்த சிறந்த ஒரு மனிதனை உருவாக்குதல் என்ற பரந்த கருத்திலிருந்து பரீட்சைகளில் சித்தியெய்துவது ஒன்றே கல்வியின் நோக்கம் என்பதுவரை சிந்திக்கும் ஒரு சமூகத்தில் கல்வியுடன் தொடர்பான முரண்பட்ட கருத்துக்கள் எழுவது இயல்பானதே. நூற்கல்விக்கும் பரீட்சையில் சித்தியெய்துவதற்கும் முன்னுரிமை வழங்கப்படும் ஒரு சூழ்நிலையில் அந்தக் கல்வியை வழங்கும் ஆசிரியர்களின் வகிபாகமும் அதற்கேற்ப மாற்றமுறுவது எதிர்பார்க்கப்பட வேண்டியதொன்றேயாகும்.

குறுகிய காலத்தில் பெருமளவு அறிவுத்தொகுதியைத் தம தாக்கிக் கொள்ள எண்ணும் மாணவர் சமூகம் பாடசாலையில் பூரண

திருப்தி காணாது வெளியே பல்வேறு கல்வி நிறுவனங்களின் துணையை நாடி நிற்கின்றனர். ஆசிரியர்களின் ஈடுபாடின்றியே கற்றலில் ஈடுபடக்கூடிய பல்வேறு முறைகள் இன்று காணப்படினும், மாணவர்கள் இவற்றில் கவனம் செலுத்தாதிருப்பதுடன் செவி வழிக்கல்வியிலேயே பெருமளவு நம்பிக்கை வைத்து உபகார வகுப்புகளில் தங்கியிருப்பதும் இத்தகைய கல்வி முறையில் காணக்கூடிய மேலும் சில விரும்பத்தகாத இயல்புகளாகும். உறுதியான அனுபவத்தை வழங்கக்கூடிய கற்றல் முறைகள் மாணவர்களிடமிருந்து விலகிச் செல்வதால் சிறுவயது முதலே அடைந்துகொள்ள வேண்டிய பல தேர்ச்சிகளையும் இவர்கள் இழந்து விடுகின்றனர்.

## ஆய்வுப் பெறுபேறுகள்

1990களில் கல்வி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சில ஆய்வுகளில் பாடசாலைகள் உரிய எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றத் தவறியுள்ளன என்று அறியப்பட்டுள்ளது. பாடசாலைகளில் கல்வி கற்க வேண்டிய வயதிலுள்ளவர்களில் 14% பிள்ளைகள் இன்னும் பாடசாலைக்கு வெளியே இருப்பதாகவும் பாடசாலையில் சேர்ந்த மாணவர்களிலும் கணிசமான தொகையினர் பல்வேறு மட்டங்களில் இடை விலகியுள்ளனர் என்பதும் இவ்வாய்வில் கண்டறியப்பட்டது. மாணவர்களின் கற்றல் அடைவு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் ஆரம்ப வகுப்புக்களில் இருந்து இடைநிலை வகுப்புகளுக்குச் செல்லும் மாணவர்களில் குறிப்பிடத்தக்க அளவு எண்ணிக்கையினர்க்கு தாய் மொழி - கணிதம் தொடர்பாக ஆகக் குறைந்த அடைவு மட்டம் கூட இல்லை என்பதும் கண்டறியப்பட்டது. அத்தியாவசியமான இவ்வடைவு மட்டத்தைத் தாண்டாத நிலையிலேயே கணிசமான தொகையினர் இடைநிலை வகுப்புகளில் நுழைகின்றனர் என்ற உண்மை இந்த ஆய்வுகள் மூலம் அறியப்பட்டது.

கனிஷ்ட இடைநிலை வகுப்புகளை நிறைவு செய்து கொண்டு கல்விப் பொதுத்தராதர சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுபவர்களிலும், சிரேஷ்ட இடை நிலை கற்றபின் இறுதியில் தோற்றும்

உயர்தரப் பரீட்சையிலும் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையினர் அனைத்துப் பாடங்களிலும் அல்லது பெரும்பாலான பாடங்களில் தவறிவிடுகின்றமையும் குறிப்பிடவேண்டிய ஒரு விடயமாகவுள்ளது. பாடசாலைத் தொகுதியிலிருந்து பெருந்தொகையானோர் தனிப்பட்ட கல்வி நிலையங்களை நாடி மேலதிக உபகார வகுப்புகளுக்குச் சென்றாலும் நூற் கல்வியைத் தானும் சராசரியாக நிறைவு செய்து உரிய பாடங்களில் ஆகக் குறைந்த சித்தியைத் தானும் பெற்றுக் கொள்ளாதிருப்பது இதன் இன்னொரு பக்கமாகும்.

பாடசாலைக் கல்வியை வெற்றிகரமாக முடித்துவிட்டு வெளியேறும் மாணவர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆய்வாளர்கள் வெளிப்படுத்தியுள்ள தகவல்களும் விரும்பத்தக்கதாக இல்லை. வாழ்க்கையை வெற்றிகரமாக நடத்துவதற்குரிய ஆயத்தநிலையை அவர்கள் பாடசாலைக் கல்வியினூடாகப்பெறவில்லை என்று அத்தகவல்கள் கூறுகின்றன. தொடர்ந்து கற்பதற்கு, வேலை வாய்ப்புக்களில் பயிற்சி பெறுவதற்கு, அரச, தனியார் துறைகளில் வெற்றிடமாக உள்ள ஒரு தொழிலுடன் தன்னைப் பொருத்திக் கொள்வதற்கு அல்லது சுயமாக ஒரு தொழில் செய்வதற்குரிய ஆற்றல்களும் இம்மாணவர்களில் பெரும்பான்மையானவர்களிடையே விருத்தியடைவதாக இல்லை. ஏதாவது ஒரு தொழிலைத் தேடிக்கொண்டாலும் அது வெற்றிகரமாக அமைவது குறைவாகவேயுள்ளது. வாழ்க்கை பூராவும் கற்பது என்பது மாறிவரும் உலகுடன் சேர்ந்து முன்னே செல்வதற்கு அவசியமான ஓர் அம்சமாக இருப்பினும் இத்தகைய வாய்ப்புகளை அமைத்துக் கொண்டவர்களின் எண்ணிக்கை மட்டுமன்றி அவ்வாறு அமைத்துக் கொண்டவர்களில் எத்தனைபேர் சமூகம் குறித்த நேர் மனப்பாங்குடன் வாழ்கின்றனர் என்பதும் கேள்விக்குரியதாகவேயுள்ளது. இவற்றின் ஒட்டு மொத்த விளைவாக தனிப்பட்ட வாழ்க்கையையும் தொழில்துறைகளையும் சிறப்பாக அமைத்துக் கொள்ளும் வாய்ப்பு இளைஞர்களில் இருந்து தூரமாக்கியிருப்பதுடன் சமூகத்தின் எதிர்காலப் பயணத்திற்கு இது பெரும் சவாலாகவும் அமைந்துள்ளது.

## அறிவுமையக் கல்வி

நூல்களைக்கற்று, மேலதிக வகுப்புகளுக்குச் சென்று, மனமீட்டுக் கற்கும் மாணவர்களின் அடைவு மட்டம் அதிகரித்திருப்பினும் நுண்ணறிவு, தொடக்குமாற்றல், குழுவாக வேலை செய்தல், தீர்மானம் எடுத்தல், நிச்சயமற்ற அல்லது ஆபத்தான நிலைமைகளை எதிர்கொள்ளல், சீரான உறவுகளைப் பேணல், பொறுப்புணர்வு, வகை கூறல், சுயகட்டுப்பாடு, ஒழுகலாறு போன்ற ஆற்றல்கள் இதனூடாக அவர்களிடையே விருத்தி-யடையும் என்று எதிர்பார்க்க இயலாது.

கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல் ஆகிய நால்வகை மொழித்திறன்களை விருத்தி செய்ய முறைசார் கலைத் திட்டத்தின் மூலம் பாரிய முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் போட்டியும் வேகமும் நிறைந்த பரீட்சை மையக் கற்றல் கற்பித்தல் காரணமாக தாய்மொழியைத் தானும் சரியாகக் கையாளுபவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருவதைத்தான் காணமுடிகின்றது. குறிப்பிட்ட நூல்களுக்குள் மாணவர்-களை முடக்கி வைத்துவிட்டு பரந்த தொடர்பாடற் தேர்ச்சிகள் ஏற்படும் என்று எதிர்பார்ப்பது சாத்தியமில்லை. அத்துடன் சகபாடிகளுடன் சேர்ந்து ஒத்துழைப்புடன் கருமமாற்றுதல், மன எழுச்சி நிலைமைகளை சமநிலையில் வைத்திருத்தல், மனமகிழ்ச்சி, சமூக விழுமியங்கள் போன்ற நிலைமைகள் இழி நிலைக்குத் தள்ளப்பட்டமையால் இனங்களுக் கிடையே மட்டுமல்ல இனத்துக்குள்ளேயும் ஒருமைப்பாட்டைப் பேண முடியாத நிலைமை தோன்றியுள்ளது.

அறிவை மையமாகக் கொண்டு கற்றல், கற்பித்தல்களில் ஈடுபட்டதன் மூலம் ஏற்பட்டுள்ள தீயவிளைவுகள் ஏராளமுண்டு. அன்றாட வாழ்க்கையின் பிரச்சினைகளை யதார்த்தபூர்வமாக விளங்கிக் கொள்ளல், அவற்றை பகுப்பாய்வு செய்தல், அவற்றுக்கான தீர்வுகளை அல்லது முடிவுகளைக் காணுதல் என்பவைக்கூட இத்தகைய கல்வி பெற்றோரால் முடியாதிருக்கிறது என்பதும் குறிப்பிடத்தக்கதே.

தேவையான போது தலைமைத்துவத்தை ஏற்கவும், ஏனைய நேரங்களில் குழுவில் ஒரு சகபாடியாக இணைந்து கருமமாற்றவும், ஆக்க முயற்சிகளிலும் இரசனையுணர்வுகளிலும் ஈடுபடவும், சுற்றாடல் தேர்ச்சி-களை விருத்தி செய்து கொள்ளவும் இவர்களால் முடியாதுள்ளது. விளையாட்டு ஓய்வு என்பதில் காட்டும் அலட்சியப் போக்குக் காரணமாக உடல்ரீதியாகவும் பலவீனர்களாகவே காணப்படுகின்றனர். ஓய்வு நேரத்தைப் பயனுள்ள வழியில் கழிக்க இவர்கள் அறிந்திருக்கவில்லை என்பதால் நேரத்திலிருந்து உச்சப்பயன் பெறுதலும், வாழ்க்கையை அழகியல் மனப்பாங்குடன் அணுகுவதும் இவர்களால் முடியாதுள்ளது. சமய ஈடுபாடுகளுக்கான நேரமும் குறைவு என்பதால் விழுமியத் தேர்ச்சிகளும் குறைவாகவே அமையப்பெற்றிருக்கும். ஒரு சீரான வாழ்க்கையைக் கட்டியெழுப்பத் தடையாகவுள்ள இவ்வத்தனை விடயங்களும் கல்வியின் நோக்கத்தையே தடம்புரளச் செய்திருப்பதுடன் தனிமனித விருத்தியை மட்டுமன்றி சமூக அபிவிருத்தியையும் நாட்டின் அபிவிருத்தியையும் பின்தள்ள ஏதுவாயுள்ளன.

பரீட்சைக்குரிய பாடங்களை மட்டும் கற்பதில் ஈடுபட்டு இணைந்த பாடச் செயற்பாடுகளுக்கு இடம் கொடுக்காததன் விளைவாக இலங்கைப் பாடசாலைகள் தமது முக்கிய நோக்கங்களை அடையத் தவறியுள்ளன. எந்த ஒரு நாட்டினதும் வெற்றிக்காக 21ஆம் நூற்றாண்டின் கல்வி, தன்னகத்தே கொண்டிருக்க வேண்டிய முக்கிய நான்கு தூண்களைச் சுட்டிக்காட்டும் டேலோ அறிக்கையிலும் மேற்கூறிய விடயங்கள் வலியுறுத்தப்பட்டுள்ளன.

## புதிய கல்விச சீர்திருத்தம்

இன்று நாட்டில் நடைமுறையிலுள்ள புதிய கல்விச் சீர்திருத்தம் இப்பிரச்சினைகளை நன்கு ஆராய்ந்து விளங்கி முன்வைக்கப்பட்ட ஒன்றாகும். ஒன்பது தேசிய நோக்கங்களுக்கும், ஐந்து தேர்ச்சிகளுக்கும் ஊடாக விருத்தி செய்யப்பட்டுள்ள இச்சீர்திருத்தம் மூலமாக பாடசாலை வாழ்வை செவ்வனே நிறைவு செய்து தமது உயர்கல்விக்கு அல்லது ஒரு

தொழிலுக்கு, அல்லது பொதுவாழ்க்கைக்கு செல்வதற்காகத் தாம் தெரிவு செய்யும் எந்தவொரு வழிமுறையும் வெற்றிகரமாக அமையக் கூடிய ஒரு கல்வி முறை இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. இதன் முக்கிய அமிசம் மாணவர்களைச் செயற்பட வைப்பதாகும். ஆழமான விடய அறிவு கணிசமாகக் குறைக்கப்பட்டு மாணவர்கள் செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படுவதனூடாகத் தேர்ச்சிகளை அடைய இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. பாடவிடயங்களுடன் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையும் வாழ்க்கை அனுபவங்களையும் தொடர்புபடுத்தவும் கற்றலை அன்றாடப் பிரச்சினைகளுடன் தொடர்புபடுத்தி நோக்கவும் களம் அமைக்கப்பட்டுள்ளது. மதிப்பீட்டுக் கலாசாரத்திலிருந்து கணிப்பீட்டுக் கலாசாரத்திற்குள் பிரவேசிப்பதனூடாக பாண்டித்திய மட்டத்தை இனங்காணவும் அத்தியாவசிய பாண்டித்திய மட்டத்தை அடையாத-வர்க்கு அந்த இடத்திலேயே ஊக்குவிப்பும் உதவியும் அளிக்கவும் ஏற்பாடுகள் இத்திட்டத்தில் செய்யப்பட்டுள்ளன.

இத்தகைய மாற்றங்களை எதிர்பார்க்க வேண்டுமானால் பாடசா-லைத் தொகுதியில் அவசியமான அத்தியாவசிய மாற்றங்கள் கட்டாயம் மேற்கொள்ளப்பட வேண்டும். புதிய கல்விச் சீர்த்திருத்தங்களின் வெற்றியை அடிப்படையாகக்கொண்டு ஆசிரியர் வகிபாகத்தில் பாரிய மாற்றங்கள் வரவேண்டும். இத்தகைய மாற்றம் ஆசிரியர்கள் மாணவர்கள் உட்படப் பாடசாலைத் தொகுதியிலும் கல்வியிலும் ஆர்வமுள்ள அனைவருக்கும் முக்கியமானவையாகும். இன்றைய யுகத்திற்குரிய ஆசிரியர் வகிபாகம் எவ்வாறு இருக்க வேண்டுமென்பதை ஆராய்வதற்கு ஏற்கனவே இருக்கும் மரபு ரீதியான ஆசிரியர் வகிபாகத்தை நினைவு படுத்திக்கொள்வது பொருத்தமானது.

## மூன்று வகிபாகங்கள்

மரபுரீதியான ஆசிரிய வகிபாகத்தினூடாக ஆசிரியர் முன்னுரிமை வழங்குவது கற்பித்தலுக்கேயன்றிக் கற்றலுக்கன்று. பாட அறிவுடன் கூடிய ஒருவர் 'ஆசிரியர்' என்ற அந்தஸ்தினைப் பெறுகிறார். பாட அறிவு

அற்றவரும் படிப்பதில் விருப்பமுள்ளவர்களுமான பிள்ளைகள் "மாண-வர்கள்" என்ற இடத்தில் உள்ளனர். முடியுமான அளவு விடயங்களை மாணவருக்கு வழங்குதல் "கற்பித்தல்" என்று வழங்கப்படுகிறது. இதன்படி பார்க்கும்போது நிறை குடத்திலிருந்து ஒரு கோப்பைக்கு தண்ணீர் ஊற்றுவது போன்ற ஒரு நடவடிக்கை தான் கற்றல் - கற்பித்தல் செயற்பாடு. மாணவர்களை உரிய அடைவு மட்டத்திற்குக் கொண்டுவருவதற்காக பாடவிடயங்களைக் கட்டமைத்து, குறிப்புகள் வழங்கி, படிமுறைகளிட்டு, மாணவர்களுக்குத் தன்னிடமுள்ள விடயத்தைக் கடத்துவதற்கான முயற்சி எடுக்கப்படும். ஆசிரியர் இந்தக் கடத்தல் வகிபாகத்தின்போது பூரண எதேச்சாதிகாரமுடையவராக இருப்பார். பாடசாலையில் மாணவர் கற்கும் விடயம், நேரம், கற்கும்முறை, அளவு என்ற எல்லாவற்றையும் ஆசிரியரே தீர்மானிப்பார். மாணவர் கேட்போனாக இருந்து முடியுமான அளவு விடயத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படும். இது ஆசிரியரின் கடத்தல் வகிபாகம் (Transmission Role) எனப்படும். இந்தக் கடத்தல் வகிபாகத்தில் பல குறைகள் இனங் காணப்பட்டன. ஒரு பக்கத்திலிருந்து மட்டும் கருத்துக்கள் செல்லும் ஒருவழிப்பாதையாக இது அமைந்திருக்கும். மாணவர் பதுமை போன்று கைகட்டி வாய் மூடி மௌனியாக இருந்து கேட்பவனாக இருக்க எதிர்பார்க்கப்பட்டான்.

மாணவர்கள் பெற்றிருந்த அனுபவங்களையும் கருத்திற் கொண்டு அவற்றிலிருந்தும் பயன் பெறும் வகையிலான இரு வழித்தொடர்பாடல் முறை பற்றிப் பிற்காலத்தில் ஆராயப்பட்டமையின் விளைவாக ஆசிரி-யரின் கொடுக்கல் வாங்கல் வகிபாகம் (Transaction Role) தோன்றியது. மாணவன் இதுவரை தெரிந்து வைத்துள்ள விடயங்களை நிறைவுபடுத்தி அவர்களின் அறிவுசார் திறன்களை விருத்தி செய்யும் கடமையையும் இப்புதிய ஆசிரியர் வகிபாகம் நிறைவேற்றவேண்டுமென எதிர்பார்க்கப்-பட்டது. இங்கு ஆசிரியர் வசதி செய்பவராகச் (Facilitater) செயற்படுவார். கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கி, மாணவர்களை வேலைகளில் ஈடுபடுத்தி, மாணவர்கள் முன்னறிவால் பயன்பெறக்கூடிய ஒரு வகிபாக-மாக இது அமைகிறது. இந்த வகிபாகத்தை ஆற்றிய ஆசிரியர், மாணவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த விடயத்தை கவர்ச்சியாக

முன்வைத்தல் மூலம் பாடத்தில் பிரவேசிப்பார். மாணவர்களிடையே கலந்துரையாடிப் படிப்படியாக பாடத்தை வளர்த்துச் செல்வார். மாணவர் ஆசிரியர் இடைத்தொடர்பு முக்கிய அம்சமாகும்.

21ஆம் நூற்றாண்டில் எதிர்பார்க்கப்படும் தேர்ச்சிகளை மாணவர்களிடையே ஏற்படுத்துவதற்கு இவ்விரண்டாவது ஆசிரியர் வகிபாகமும் போதுமானதல்ல என்று கண்டறியப்பட்டுள்ளது. மாணவர்களின் நவீன தேவைகளை நிறைவுசெய்யும் வகையில் நிலைமாறும் வகிபாகம் (Transformation Role) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி கற்றல் செயலொழுங்கு முன் கூட்டியே திட்டமிடப்பட வேண்டும். வகுப்பறையில் அல்லது வெளியில் மாணவர்கள் அந்தத் திட்டத்திற்கமைய செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும். ஆசிரியர் பாடத்தின் தேவையும் மாணவர்களின் தேவையும் கவனத்திற் கொண்டு திட்டங்களை இட்டிருப்பார். ஒப்படை செயற்திட்டம், செயற்பாட்டு வாதவிவாதம் கருத்துத் திரட்டி முன் வைத்தல், சிந்தனைக் கிளறல், காட்சிப்படுத்தல் போன்ற பல்வேறு முறைகளினூடாக மாணவர்களின் ஈடுபாடு அமையும். பிரச்சினை தீர்த்தல், கண்டறிதல், பரிசோதனை செய்து காட்டல், விவகார ஆய்வு, கருத்தரங்கு, களப்பிரயாணம், இலக்கிய உசாவுகை, சிறு ஆராய்ச்சி போன்ற பொருத்தமான வடிவங்களில் கற்றல் சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படும். இதன்மூலம் அன்றாட வாழ்க்கையுடன் பாட அறிவு தொடர்புபடுத்தப்படும். கற்றலும் கணிப்பீடும் மதிப்பீடும் சமகாலத்தில் நடைபெறும். நிலைமாற்று வகிபாகத்தை வெற்றிகரமாகக் கொண்டு நடத்த வேண்டுமாயின் பாடம் முன்கூட்டியே ஒழுங்குமுறையாக திட்டமிடப்பட்டிருத்தல் வேண்டும். உரிய தேர்ச்சியை மையமாகக் கொண்டதாக இக்கற்றல் கற்பித்தல் செயற்பாடு அமையும். அங்கு கற்பித்தலை விட கற்றலே முக்கியத்துவம் பெறுகின்றது.

கற்றற் செயல் ஒழுங்கில் அறிவு வழங்குபவராக,கல்வியை வழங்க உதவுபவராக கருமமாற்றுவதற்குப் பதிலாக நிலைமாற்று வகிபாகத்தை ஆற்றுதல் ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுவது மாணவர்களின் கற்றலை ஊக்குவிக்கும். இந்த அடிப்படையில் மாணவர்களுக்குரிய வகை கூறல்களை செயற்பாடுகளாக மாற்றுவதனூடாகப் பாரிய மாற்ற

மொன்றை ஏற்படுத்த முடியும். தனிமனிதனதும் சமூகத்தினதும் நிலையை மாற்றும் செயலொழுங்கே இந்த நிலைமாற்று (Transform) வகிபாகமாகும். விமர்சன ரீதியான சிந்தனைக்கும், ஆக்கத் தொழிற்பாட்டுக்கும், குழுவாக வேலை செய்வதற்கும், தலைமைத்துவத்திற்கும், தொடர்பாடல் விருத்திக்கும் இம்முறையின் கீழ் பழக்கப்படும் மாணவன், பாடசாலை வாழ்க்கை முடிவில் எவ்வழியைத் தேர்ந்தெடுத்தாலும் அதனை வெற்றிகரமானதாக செய்வதற்குரிய பல தேர்ச்சிகளுடன் கூடிய ஒருவனாகத் திகழ்வான்.

காலத்தின் தேவைக்கேற்ப ஆசிரிய வகிபாகமும் மாற்றத்தை வேண்டி நிற்கின்றது. ஆனால் மரபு ரீதியான ஆசிரியர் வகிபாகத்தில் பழக்கப்பட்டுள்ள ஆசிரியர்கள் அதில் தமக்குள்ள அதித அதிகாரங்களை மனதில் வைத்துக்கொண்டதாலோ என்னவோ இவ் வகிபாகத்தை வகுப்பறைக்குக் கொண்டுவர இன்னும் ஏனோ தயங்குகின்றனர். தனது பயிற்சிகளின் அடிப்படையில் கொடுக்கல் வாங்கல் வகிபாகத்தைச் சிலர் கையாண்டாலும் புதிய வகிபாகத்தை கையாள்வதில் தயக்கம் காட்டுகின்றனர்.

எனவே 21 ஆம் நூற்றாண்டின் தேவையை நிறைவு செய்யும் வகையிலான மாணவர் சமுதாயத்தை உருவாக்கும் பாரிய பொறுப்பைச் சுமந்துள்ள ஆசிரியர் புதிய நிலைமாற்று வகிபாகத்தினை நன்கு விளங்கி அதனை வெற்றிகரமாகக்கொண்டு நடத்துவதற்குரிய ஆசிரியர் தேர்ச்சிகளை விருத்தி செய்து கொள்ளவும் அதனைத் தனது வகுப்பறையில் நிலைநாட்டவும் முன்வருவது காலத்தின் கட்டாய தேவையாகும்.

# சொல் வளர்ச்சிப் போக்கும் இன்றைய தேவையும்

**புண்ணியேஸ்வரி நாகலிங்கம்**
B.A. (Cey.), PGDE, M.A.
பிரதம செயற்திட்ட அதிகாரி, தமிழ்மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்

---

## அறிமுகம்

எந்த ஒரு மொழியிலும் சொற்கள் பிரதான இடத்தை வகிக்கின்றன. சொற்களின் துணையில்லாது எதன் கருத்தையும் துலக்கமாக அறிய முடியாது. செய்யும் செயல்களையும், கண்ணால் பார்ப்பவற்றையும், உள்ளத்தால் உணருபவற்றையும் சொல்லால் வெளிப்படுத்துகின்றோம். எத்தகைய எண்ணங்களையும், கருத்துக்களையும், உணர்வுகளையும் எடுத்துச் சொல்வதற்கு போதிய சொற்கள் ஒருமொழியில் இருக்கும் போதுதான் அம்மொழியைப் பயன்படுத்தும் மக்களின் நாகரிக வளர்சியை எடுத்துக்காட்டும்.

ஒரு மொழியின் எல்லாச் சொற்களையும் எல்லோராலும் அறிந்து-கொள்ள முடிவதில்லை. அறிந்து கொள்ள வேண்டிய தேவையுமில்லை. எனினும் சொற்களின் பயன்பாடு ஒருவரின் கருத்து வெளிப்பாட்டுக்கு அவசியமாகிறது. எனவே ஒவ்வொருவரும் தத்தமதுமொழியின் சொற் களஞ்சிய அறிவை வளர்த்துக் கொள்வது அத்தியாவசியமாகும். இதைக்

கருத்திற்கொண்டு தமிழ்மொழியில் சொல்லின் வளர்ச்சிப் போக்கு ஆரம்பம் தொட்டு எவ்வகையில் விரிந்து பரந்து செல்கின்றது என்பதையும் சொற்களின் வளர்ச்சிப்போக்கில் இன்று வேண்டப்படுவது யாது என்பதையும் நோக்குவோம்.

## சொல்

மொழியின் அடிப்படைக் கூறுகளில் ஒன்று சொல். சிறிய, தனித்து நிற்கின்ற பொருள் கொண்ட மொழிக்கூறு சொல். தொல்காப்பியர் சொல்லை கிளவி, சொல், மொழி என்று மூன்று சொற்களால் குறித்துள்ளார். இலக்கணகாரர் சொற்களை இலக்கணஅடிப்பபடையிலும் சொற்களஞ்சிய அடிப்படையிலும் பாகுபாடு செய்துள்ளனர். மொழி வளத்தை சொல் காட்டும். சொல்லின் வளத்தால் மொழி வளரும். கருத்து வளர்ச்சி, காலவளர்ச்சியினை சொற்கள் பிரிதிபலிக்கும். புதிய பொருள், புதுக்கருத்தை உணர்தல் என்பவற்றால் சொற்பெருக்கம் ஏற்படும். சொற்கள் பயன்பாட்டுச் சூழலுக்கேற்ப புதுப்பொருளைப் பெறும். அணிநய மாற்றம் சொற்பொருள் மாற்றம் ஏற்பட ஏதுவாகின்றது. பிறமொழிக்கலப்பு சொற்பொருளில் மாற்றத்தை ஏற்படுத்தும். வாழ்க்கை வளர்ச்சி பெற சொற்களின் எண்ணிக்கையும் பெருகும். இன்று தன்னாற்றலாலும் பிறமொழிச் சொற்களை எடுத்தாளுதலாலும் தமிழ் மொழியில் சொற்கள் பெருகியுள்ளன. இந்த நிலையில் வழக்கிறந்த சொற்களை விடுத்து வழக்கிலுள்ள சொற்களை பயன்படுத்துவதும், பிறமொழிச் சொற்களுக்கு உகந்த தமிழ்ச்சொற்களை கையாளுதலும் காலத்தின் தேவையாகும்.

## சொற்களஞ்சியம்

இச்சந்தர்ப்பத்தில் சொற்களஞ்சியத்தின் தோற்றம் பற்றி நோக்கின், சொற்களைப் பற்றிய ஆய்வும், சொற்களஞ்சிய உருவாக்கமும் இலக்கண உருவாக்க காலத்தில் தொடங்கப்பட்டவை. தொல்காப்பியத்தில் சொற்களஞ்சியம் இலக்கணத்தின் ஒரு பகுதியாகப் பல இடங்களில் இடம் பெற்றது. பின்னர் தனி நூலின் தேவையை

உணர்ந்து நிகண்டுகள் உருவாக்கப் பெற்றன. நிகண்டுகள் ஆரம்பத்தில் வடமொழி வேதத்தின் அங்கமாய், வைதிகச் சொற்களின் பொருளை உணர்த்தும் கருவி நூலுக்கு மட்டும் சிறப்பாக வழங்கப்பட்டது. பின்னர் சொற்பொருளை உணர்த்தும் நூல்களுக்கு இப்பெயர் வழங்கப்பட்டது. அகராதிக் கலை வளர்ச்சிக்கு நிகண்டு உருவாக்கம் முன்னோடி எனலாம். நிகண்டுகளை நோக்கும்போது மிகப் பழமையானது திவாகரம். இதில் சொற்றொகை பன்னிரெண்டு தொகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நிகண்டில் பிங்கல நிகண்டும் குறிப்பிடத்தக்கது. நாமதீப நிகண்டில் சொற்றொகைப் பாகுபாடு குறிப்பிடத்தக்க ஒழுங்கில் அமைந்துள்ளது. நிகண்டில் வந்துள்ள சொற்றொகைப் பாகுபாடுகளே சொற்களஞ்சிய உருவாக்கத்திற்கு முன்னோடியாக அமைந்தன. நிகண்டுகள் மனனம் செய்வதற்கு உகந்த முறையில் சூத்திரங்களாக எழுதப்பட்டிருந்தன. இதில் எதுகை மோனைக்கு முதன்மை கொடுக்கப்பட்டதேயன்றி பொருளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. மேலும் தற்காலத் தமிழுக்குத் தேவையான சொற்கள் நிகண்டில் இல்லை. நிகண்டில் உள்ள சொற்கள் தற்காலத் தமிழில் வழக்கிறந்தவையாக இருந்தன. எனவே தற்காலத் தமிழுக்கு குறுக்கு நோக்குக் கருவியாக சொற்களஞ்சியம் தேவை என்ற நிலையில் சொற்களஞ்சிய உருவாக்கம் இடம்பெறலாயிற்று.

சொல்லுதல் என்பதைக் குறிக்கும் நாற்பது சொற்களை பாவாணர் பட்டியலிட்டுக் காட்டுகிறார். அறைதல், ஓதுதல், கிளத்தல், இசைத்தல், கத்துதல், கழறுதல், கிளத்துதல், குழறுதல், கூறுதல், சாற்றுதல், செப்புதல், நவிலுதல், நுகலுதல், பகர்தல், பறைதல், பண்ணுதல், பணுவுதல், புகலுதல், பேசுதல், மொழிதல், மாறுதல், விதத்தல், விள்ளுதல், விளம்புதல் எனவரும்.

சொல்லுக்கு நெல் என்ற பொருளும் உண்டு. காரணம் சொல் மணி போன்றது என்பதும் உள்ளீடு உடையதும் என்பதனாலாகும். இதே போன்று பூ என்பது பொதுப் பெயராகும். பூ முதலில் தோன்றும் போது அரும்பு என்றும், பேரரும்பானபோது, போது என்றும், மலர்ந்தபின் மலர் என்றும், வீழ்ந்தபின் வீ என்றும், வாடியபின் செம்மல் எனவும் கூறப்படுவது

சொல்வளத்தையே காட்டுகிறது. அழகு என்பதைக் குறிக்க இருபத்தொன்பது சொற்கள் இருப்பதாகத் திவாகரம் கூறும். ஏர், வனப்பு, எழில், காரிகை, தையல், பொற்பு, மாண்பு, செவ்வி, அற்புதம், தோட்டி, காமா, கவின், விடங்கம், சாமம், வகுப்பு, ஒப்பு, மஞ்சு, அணிகவ்வி, அந்தம்.

இதேபோன்று மலை என்ற சொல்லுக்கு பல சொற்கள் வழங்கப்படுகின்றன. இவை மலையின் சிறப்புக்களைக் கருத்திற்கொண்டு பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது.

| | | |
|---|---|---|
| உயரமான மலை | - | ஓங்கல், பிறங்கல், பொருப்பு, வெற்பு |
| நீண்ட மலை | - | விலங்கல் |
| அடுக்கடுக்கான மலை | - | அடுக்கல் |
| எதிரொலிக்கும் மலை | - | சிலம்பு |
| மூங்கில் காடுள்ளது | - | வரை |
| காடுகள் அடர்ந்தது | - | இறும்பு |
| சிறிய மலை | - | குன்று, குவடு, குறும்பொறை |
| மண்மிகுந்த மலை | - | பொற்றை, பொற்பு |

இதே போன்று சொற்களின் பொருளில் நுண்ணிய வேறுபாடுகளைக் குறிக்கவும் சொற்கள் பொருத்தமாக கையாளப்பட்டு வந்துள்ளன.

| | | |
|---|---|---|
| எத்தனை | - | எண்ணிக்கையைக் குறிப்பது |
| எவ்வளவு | - | அளவைக் குறிப்பது |
| எத்துணை | - | எண்ணிக்கை அளவு ஆகிய இரண்டையும் குறிப்பது |
| வீட்டில் கொண்டாடுவது | - | பண்டிகை |
| வெளியில் கொண்டாடுவது | - | திருவிழா |

கேட்டுப் பெறுவது - பரிசு

கேட்காது பெறுவது - பரிசில்

பெண்ணுக்கு கொடுப்பது - பரிசம்

இவ்வாறு நுண்ணிய வேறுபாடுகளையும் சொற்கள் வர்யிலாக விளக்கியுள்ளமை சொல்லினைக் கையாள்வதில் முன்னோர் கொண்டிருந்த புலமையை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. சொல்லாய்வு மிக நுட்பமான ஒன்று. சொல்லாய்வு மொழிவளத்தையும் சமுதாயப் பண்பாட்டு வரலாற்றையும் விளக்கும். சொல்லாய்வு மொழியியல் அடிப்படையில் அறிவியல் உணர்வுடன் ஆராயப்பட வேண்டிய ஒன்று.

சொல் வளர்ச்சி என்பது சொற் பெருக்கம் மட்டுமன்றி சொல்லின் பொருள் மாற்றத்தையும் சுட்டி நிற்கும். சொற்கள் பயன்பாட்டுச் சூழலுக்கேற்ப புதுப்பொருளைப் பெறுகின்றன. அறிவியல் தமிழ் என்ற துறை வளர்ச்சி பெறுவதால் பல்லாயிரக்கணக்கான கலைச்சொற்கள் தமிழில் தோற்றம் பெற்றுள்ளன. இதனால் பல்வகை அகராதிகளும் வெளிவருகின்றன. இதற்கு கிரியா அகராதி சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இது அறிவியல் யுகம். அறிவியலும் தொழினுட்ப இயலும் நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருகின்றன. நாள்தோறும் அறிவியல் சொற்களும் கருத்துக்களும் வெளிவந்தவண்ணம் இருக்கிறது. இதனால் புதிய கலைச்சொற்கள் தமிழுக்குக் கிடைத்துள்ளன. இது தமிழை மேலும் வளம்படுத்துகிறது.

தமிழ் முத்தமிழாக மட்டுமல்லாது அறிவியல் தமிழாகவும் மாற்றம் பெறவேண்டிய தேவை முக்கியமாகிறது. மருத்துவம், பொறியியல், அறிவியல், தொழினுட்பவியல் சார்ந்த சொற்களையும் பெருக்கிக்கொள்ளல் வேண்டும். தமிழ்மொழியானது புதியன புகுவதை ஏற்கும் மொழியாக மாறவேண்டும். ''பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினானே'' என்பது மொழிக்கு முற்றிலும் வேண்டப்படுவது. முன்னோர் மொழியை வளம்படுத்தியது போன்று பின்னோரும் புதுச் சொற்களைப் படைக்கவேண்டும்.

## புதிய சொற்கள்

புதிய சொற்களால் மொழி வளர்ச்சி பெறுகின்றது. பல வழிகளில் புதிய சொற்கள் உருவாகின்றன. ஒன்று பிறமொழிகளுடன் கலந்து உறவாடும்போது புதிய சொற்கள் வந்து கலந்துள்ளன. புதிய சொல்லாக்கத்தின் மூலம் புதிய சொற்கள் உருவாகியுள்ளன. புதிய எண்ணங்களின் உருவாக்கமும் புதிய சொற்கள் உருவாகக் காரணமாய் அமைகிறது. அறிவியல் தமிழ் வளர்ச்சியாலும் பெருந்தொகையான சொற்கள் தமிழுக்கு வந்துள்ளன. புரட்சி, விடுதலை, பொதுவுடமை, ஒத்துழையாமை, மதுரகலைகள், நவினங்கள், நிந்தனை, வந்தனை போன்ற சொற்களைத் தனது படைப்புக்களில் கையாண்டமையால் பாரதியார் புதுமைக் கவிஞனாக கருதப்பட்டான். அவ்வகையில் எம்மவரும் புதிய சொற்களைப் பொருத்தமாகக் கையாளல் வேண்டும்.

## பிறமொழிச் சொற்கள்

தற்காலத் தமிழில் பிற மொழிச் சொற்களைப் பயன்படுத்த வேண்டிய தேவையுள்ளது. முக்கியமாக ஆங்கிலச் சொற்களைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. உ-ம்: பஸ், ஐஸ், செக்கண்ட், பேப்பர், மினிட், டைம் போன்ற சொற்களை அன்றாடம் பயன்படுத்துகின்றோம். ஆயினும் எழுதும்போது ஆங்கில மொழிச் சொற்களைப் பயன்படுத்தாது இயன்ற வரை தமிழ்ச்சொற்களைப் பயன்படுத்துதல் நன்று. அவ்வாறின்றி பயன்படுத்துவதாயின் இந்த ஆங்கில மொழிச் சொற்களை மினிட்டு, செக்கண்டு என எழுதுவதை விடுத்து மினிட், செக்கண்ட் என எழுதுவதே பொருத்தமானது. தமிழ் நெடுங்கணக்கில் ஆங்கில உச்சரிப்பை ஒட்டிய எழுத்துக்களைப் பயன்படுத்த கிரந்த எழுத்துக்களான ஜ, ஸ, ஷ, ஹ என்ற எழுத்துக்களையும் மற்றும் ஃf முதலான குறிகளையும் பயன்படுத்தி வருவது நன்று.

ஆங்கில மொழிச் சொற்களுக்கான தமிழ்சொற்கள் இருக்கின்ற போதிலும் அவற்றைப் பயன்படுத்தாது ஆங்கிலச் சொற்களையே யாவரும் பயன்படுத்துகின்றனர். அவ்வாறு பயன்படுத்தும் சொற்கள் சில இங்கு தரப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| அரும்பொருளகம் | - | மியூசியம் |
| காசோலை | - | செக் |
| கோப்பு | - | பைல் |
| தந்தி | - | டெலிகிராம் |
| தூரிகை | - | பிரஷ் |
| தொலைப்பதிவு | - | டெலிபிறின்ற் |
| தொலைமடல் | - | டெலெக்ஸ் |
| பட்டியல் | - | பில் |
| பதிவேடு | - | றெஜிஸ்ரர் |
| படிபெருக்கி | - | ரோணியோ |
| பின்னல் | - | கேபிள் |
| பேற்றோலை | - | ரிஸீற் |
| முகவர் | - | ஏஜண்ட் |
| வைப்புத்தொகை | - | டிபொஸிற் |
| Airmail | - | வான் அஞ்சல் |
| Application | - | விண்ணப்பம் |
| Appointment | - | நியமனம் |
| Book Post | - | நூல் அஞ்சல் |
| Bakery | - | வெதுப்பகம் |
| Copywriter | - | பதிப்புரிமை |
| Cyclostyle | - | உருட்டச்சு |

| | | |
|---|---|---|
| Draft | - | வரைபு |
| Duplication | - | படிபெருக்கும் தாள் |
| Fax | - | தொலைநகல் |
| Fieldwork | - | களப்பணி |
| Fruit Salad | - | பழக்கூழ் |
| Laundry | - | வெளுப்பகம் |
| Runway | - | ஓடுதளம் |
| Registrar | - | பதிவாளர் |

ஆக்கங்களில் இத்தகைய சொற்களைப் பயன்படுத்திவரின் காலக்கிரமத்தில் மொழிவளர்ச்சி பெறும். அதேவேளை வழக்கிறந்த சொற்களை இயன்றவரை தவிர்த்து தற்காலத்தில் பயன்படுத்தும் சொற்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும். பெருகிவரும் அறிவியல் துறை சார்ந்த பிறமொழிச் சொற்களை தமிழ்மொழியில் கையாளுவதற்கான ஆர்வத்தை எம்மிடையே வளர்த்துக் கொள்ளல் வேண்டும். காலத்தின் தேவையை ஒட்டி மாற்றங்களை உள்வாங்குவது மட்டுமன்றி அவற்றை அன்றாடம் பயன்படுத்தவும் வேண்டும். பயன்பாட்டின் மூலமே மொழி வளம் பெறும்.

எமது தேசிய மொழிகளான சிங்களம், தமிழ் மொழிகளை ஒப்பு நோக்கினால் சிங்கள மொழியில் ஆங்கிலச் சொற்களுக்கான சிங்கள மொழிச் சொற்கள் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் விளைவால் சிங்களமொழியில் பல்துறை சார்ந்த அறிவியல் நூல்கள் பல வெளிவந்துள்ளன. இது வரவேற்கத்தக்க ஒன்று. முக்கியமாக கல்வியியல், அறிவியல், தகவல் தொழினுட்பம் சார்ந்த நூல்கள் பல சிங்கள மொழியில் வெளிவந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. எமது நாட்டில் தமிழ் மொழியில் இந்தநிலை இல்லை எனலாம். தமிழில் இலக்கியம், அழகியல், சமயம் சார்ந்த நூல்களே இங்கு அதிகமாக வெளிவந்துள்ளன.

கல்வியியல், அறிவியல், சார்ந்த நூல்களே இல்லை என்று கூறுமளவிற்கு ஓரிரு நூல்கள் வெளிவந்துள்ளன. இந்தநிலை மாறவேண்டும். ஆங்கில மொழிப் புலமையிருந்தும் மேற்குறித்த துறைசார்ந்த நூல்களை எழுதவோ, மொழி பெயர்க்கவோ தமிழ் அறிஞர்கள் தயங்குகின்ற நிலைமையை எமது நாட்டில் காணக்கூடியதாக உள்ளது. காரணம் அத்துறை சார்ந்த சொற்களுக்கான தமிழ்ச் சொற்கள் உரிய முறையில் தொகுத்து வெளிவராமையேயாகும். இந்த முயற்சியில் அறிஞர்கள் சிலர் ஈடுபட்டபோதிலும் அந்த ஆக்கங்கள் ஏதோ சில காரணங்களால் வெளிவராமை மிகவும் துர்ப்பாக்கியமாகும். இவற்றை வெளிவரச் செய்வது இன்றைய காலத்தின் முக்கிய தேவையாகும். தொகுக்கப்பட்ட கலைச்சொற்கள் யாவும் வெளிவருதல் வேண்டும். அறிவியல் தொழினுட்ப-வியல் வளர்ந்து செல்கின்ற வேகத்திற்கு ஏற்ப போதுமான நூல்கள் தமிழில் வெளிவருதல் வேண்டும். அத்துடன் கலைச் சொல்லாக்கம் கலைச்சொல் அகராதி என்கின்ற நிலையில் மட்டும் நாம் நின்றுவிடாது அவற்றின் துணையுடன் அறிவியல், கல்வியியல், தகவல் தொழினுட்ப-வியல் சார்ந்த நூல்கள் எம்மவரால் தமிழில் எழுதப்படல் வேண்டும். சிறந்த பிறமொழி நூல்கள் தமிழில் மொழிபெயர்க்கப்படல் வேண்டும். இது காலத்தின் தேவையாகும்.

மக்கள் வாழ்வில் பிறந்து மக்களால் வளர்க்கப்பட்டு மக்கள் வாழ்வை நாகரிகமுடையதாக உயர்த்திவரும் மொழியை காலத்தின் தேவை கருதி வளமாக முன்னெடுத்துச் செல்லுவதில் நாம் ஒவ்வொரு-வரும் பங்கேற்க வேண்டும்.

## உசாத்துணைகள்

1. நுஃமான், எம்.ஏ. (ப.ஆ.) (1993), *தொடர்பாடல் மொழி நவீனத்துவம்*, இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு.

2. சு. சக்திவேல், சு., இராஜேந்திரன், ச. (1987), *சொற்கள்*, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

# மலையகம் என்ற பின்புலத்தில் எல்லோருக்கும் கல்வி... ?

**லெனின் மதிவாணம்**
M.A., PGDE, PGDEM, SLEAS
உதவி ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

---

## அறிமுகம்

மலையகம் என்ற பின்புலத்தில் "எல்லோருக்கும் கல்வி" எனும் இத்தொனிப்பொருளானது இரு அடிப்படையான கூறுகளை தன்னுள்ளடக்கி நிற்கின்றது:

1. மலையக சமூகவமைப்பு
2. எல்லோருக்கும் கல்வி என்ற எண்ணக்கரு

இவ்விரு விடயங்களையும், ஒரு சேர நோக்கி ஆய்வு செய்வது சமகால கல்வியியல் ஆய்வில் முக்கியமானதோர் விடயமாகும். அவ்வகையில் இவ்விடயம் குறித்த ஆய்விற்கு மலையக சமுதாயவமைப்பு குறித்த தெளிவுணர்வு அவசியமானதொன்றாகின்றது.

## மலையக சமுதாயவமைப்பு

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலும், மேற்கு ஐரோப்பியவாதிகள் மூன்றாம் உலக நாடுகளை தமது காலனித்துவ ஆட்சிக்குட்படுத்தியதுடன் அந்நாடுகளில் பெருந்தோட்ட பயிர்ச்செய்கைக்கு தேவையான தொழிலாளர்களை தமது காலனித்துவ ஆதிக்கத்திற்குட்பட்டிருந்த நாடுகளிலிருந்தே இறக்குமதி செய்தனர். அவ்வாறு ஒப்பந்த பிணைப்பு செய்துகொண்டு இங்கு கொண்டு வரப்பட்ட தொழிலாளர்களும், அவர்களுடன் இணைந்து வந்த வர்க்கமுமே "மலையக மக்கள்" என்ற பதம்கொண்டு அழைக்கப்படுகின்றனர். தென்னிந்திய தமிழ் கிராம பின்னணியில் ஒரு நிலவுடமை சமூகவமைப்பின் கீழ் விவசாயிகளாக கட்டுண்டு கிடந்த இம்மக்கள் குழுமத்தினர் இலங்கையின் பெருந்தோட்டப்பயிர்ச்செய்கையின் கீழ் புதிய உற்பத்தி முறையில் - அதன் புதிய உற்பத்தி உறவுகளுக்கேற்றவகையில் - பரந்துபட்ட தொழிலாள வர்க்கமாக மாற்றப்பட்டனர்.

உழைப்பை விற்பவர்களான உழைப்பாளர்களுக்கும், அதனை சுரண்டுபவர்களான மூலதனக்காரர்களுக்கும் இடையில் நிலவிய வர்க்க முரண்பாடே மலையக சமூதாயத்தின் மனிதவூடாட்டத்தின் அடிப்படையாகும். இதனடியாக எழுவதே வர்க்கப் போராட்டமாகும்.

இவ்வகையில் நோக்குகின்ற போது இம்மக்கள் எங்கிருந்தோ வந்து, இங்கு தயாராக இருந்த பொருளாதாரத்தை சூறையாடிக் கொண்டவர்கள் அல்லர். மாறாக தமது உதிரத்தையும் உயிரையும் கொடுத்து இம் மண்ணை வளமாக்கியவர்கள். ஒருபுறமான காலணித்துவ ஆதிக்கமும், இனவொடுக்குமுறையும், மறுபுறமான சமூகவுருவாக்கமும், மலையக மக்களுக்கு தேசிய சிறுபான்மை இனம் என்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளது.

மலையகக் கல்வி வளர்ச்சி குறித்த ஆய்வும் இத்தகைய பின்புலத்தில் வைத்து நோக்கப்பட வேண்டியதாகும். ஆரம்பகாலங்களில்

மலையகச் சிறார்களால் தேயிலைக் கன்றுகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்பட்டு விடக் கூடாது என்ற நோக்கத்தின் அடிப்படையில் தான் தோட்டப்புறங்களில் பெருந்தோட்ட பாடசாலைகள் அமைக்கப்பட்டன. அவற்றில் சில சிறுவர் பராமரிப்பு நிலையங்களாகக் காணப்பட்டன. மலையகத்தின் ஆரம்பகால கல்வி முயற்சிகள் குறித்தும், அமைப்புக்கள் குறித்தும் விளக்குகின்ற பேராசிரியர் சோ. சந்திரசேகரன் அவர்கள் அதனை பின்வருமாறு வகைப்படுத்தி காட்டுகின்றார்:

- தோட்ட தொழிலாளர்களினால் உருவாக்கப்பட்ட லயன் காம்பரா பள்ளிகள்.
- கிறிஸ்வத மிஷனரிகளினால் உருவாக்கப்பட்டவை.
- ஏனைய தனியார் முயற்சிகளினால் உருவாக்கப்பட்டவை.
- தமது மதம் சார்ந்த அக்கறையை முனைப்பாகக் கொண்டு இந்து, பௌத்த சமய ஸ்தாபனங்களினால் உருவாக்கப்பட்ட கல்வி நிலையங்கள்.

1963 ஆம் ஆண்டு அரசாங்கமானது பாடசாலைகளை பொறுப்பேற்று தேசிய மயமாக்கிய போது, மலையகப் பாடசாலைகள் பாதிப்படையக் கூடிய சூழ்நிலை உருவானது. மலையகச் சிறார்களின் கல்விக்கான பொறுப்புக்கள் தோட்டத் துரைமார்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. சில பாடசாலைகள் சிங்களப் பாடசாலைகளாகவும் மாற்றப்பட்டன. இலவச கல்வி குறித்த சிந்தனையை முன்வைத்த திரு. கன்னங்கரா அவர்கள் கூட மலையக கல்வியைப் புறக்கணித்ததுடன், அதனை இந்திய முகவர்களின் பொறுப்பு எனத் தட்டிக் கழித்தமை, மலையக மக்களை பொறுத்தமட்டில் திட்டமிடப்பட்ட இனவொடுக்கு முறையாகக் காணப்பட்டன.

1980களின் பின்னர் மலையக பாடாலைகள் பல புனரமைக்கப்பட்டன. பெருந்தோட்ட பாடசாலைகளில் கல்வி அபிவிருத்தித் திட்டம் (PSEDP), ஸ்ரீபாத கல்வியியல் கல்லூரி செயற்திட்டம் (GTZ) போன்றன

அரசியல் அரங்கில் அன்னதானம், உதவித்தொகை, மனிதவுரிமை, "தன்னார்வ அரவணைப்புக்கள்" என்று ஒரு முனையில் வர்க்கப் போராட்டத்தை வளைக்க முயற்சிக்கின்ற திட்டமாக இருப்பினும், மறுமுனையில் தவிர்க்க முடியாத வகையில், கட்டிட வகையிலும், சில வளங்கள் கிடைக்கப்பெற்றதிலும் அபிவிருத்தி அடைந்ததாகக் காணப்படுகின்றன.

மலையக சமூகவமைப்பில் சிறுதொகையினராகக் காணப்பட்ட உயர் மத்தியதர வர்க்கத்தினரின் (தோட்ட முகாமையாளர், பெரு-முதலாளிகள்) பிள்ளைகள் கொழும்பு, கண்டி போன்ற நகரங்களில் காணப்பட்ட செல்வந்த பாடசாலைகளில் கல்வி கற்றனர். மத்திய தரவர்க்கத்தினரதும், தொழிலாளர்களினதும் பிள்ளைகள் பெரும்பாலும், மலையக பிரதேசங்களில் காணப்பட்ட பாடசாலைகளிலே கல்வி கற்றனர். குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களின் பிள்ளைகளில் 90 சதவீதமனோர் பெருந்தோட்ட துறைகளுடன் சார்ந்திருந்த தோட்டப் பாடசாலைகளில் தமது கல்வியைத் தொடர்பவர்களாகக் காணப்பட்டனர்; காணப்படு-கின்றனர்.

## எல்லோருக்கும் கல்வி ..........?

எல்லோருக்கும் கல்வி எனும் எண்ணக்கருவானது சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஐக்கிய நாடுகளின் மனிதவுரிமை சாசனத்-தினால் முன்வைக்கப்பட்டது. 1990 ஆம் ஆண்டு தாய்லாந்து நாட்டில் இடம் பெற்ற ஜொம்ரியன் மகாநாடு முக்கியமானது.

எல்லோருக்கும் கல்வி என்னும் எண்ணக்கருவானது எத்தகைய பின்னணியில் எத்தகைய நலனை அடிப்படையாகக் கொண்டு உருவா-கியது என்பதனைப் புறஉலகு, மனிதசிந்தனை என்ற இரண்டின் பொதுவான விதிகளை, ஒவ்வொரு காலத்துக் கல்வி சிந்தனைகளுக்கும், சமுதாய இயக்கங்களுக்குமான உறவை அவற்றின் பன்முகப்பாட்டின் அடிப்படையில் நோக்க வேண்டியது சமகால தேவையாகும். பாட்டாளி வர்க்கமும், அதன் நேசசக்திகளும் முன் வைத்த முதல் கோரிக்கை

அனைவருக்கும் கல்வி என்பதாகும். கல்வி என்பது குறிப்பிட்ட வர்க்கத்தினருக்குரிய ஆபரணமாக அமையாது, அது சகலருக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்பது அதன் உள்ளீடாகும். இத்தகைய கோரிக்கைக்காக, உழைக்கும் வர்க்கமும்அதன் நேச சக்திகளும் தாபன ரீதியாக ஒன்றிணைந்து முன்வைத்த முதல் போராட்டம் 1838 இல் இடம்பெற்ற சாசன இயக்க போராட்டமாகும். பிரஞ்சு புரட்சியின் போதும் "அனைவருக்கும் பள்ளி" என்ற கோரிக்கை முதன்மைப்படுத்தப்பட்டிருந்தது. 1848 இல் கார்ல் மார்க்ஸ், ஏங்கல்ஸ் முதலானோர் வெளியிட்ட கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் "அனைவருக்கும் பொதுக்கல்வி" எனும் கோரிக்கை வலியுறுத்தப்பட்டிருந்ததுடன், அதனை நடைமுறைச் சாத்தியமாக்குவதற்கான திசைமார்க்கமும் விஞ்ஞான பூர்வமாக தெளிவுபடுத்தப்பட்டிருந்தது.

எனவே, 'எல்லோருக்கும் கல்வி' என்ற எண்ணக்கருவின் பிதாமகன் என ஐக்கிய நாடுகள் சாசனம் தம்மைத் தாமே பிரகடனப்படுத்திக் கொண்ட போதிலும், மேற்குறித்த வரலாற்றுப் பின்னணியும், அதன் நிர்ப்பந்தங்களுமே இந்தக் கோரிக்கை ஏற்கக் கூடிய சூழலை உருவாக்கியது.

## எல்லோருக்கும் கல்வி நடைமுறைச் சாத்தியமானதா?

1997 ஆம் ஆண்டு யுனிசெப் நிறுவனம் உலக சிறுவர் நிலையைப் பற்றிய அறிக்கையை முன் வைத்தது. அதில் பின்வரும் கூற்று அவதானத்திற்குரியதாகும்:

> சுமார் ஒரு பில்லியன் மக்கள், ஒரு புத்தகத்தை வாசிக்கவோ, தம் பெயரை ஒப்பமிடவோ தெரியாதவர்களாக 21 ஆம் நூற்றண்டை எதிர்கொள்வார்கள். இந்நிலையில் இவர்கள் ஒரு கணிப்பொறியை இயக்குவது பற்றியோ இலகுவான ஒரு விண்ணப்பத்தை நிரப்புவது பற்றியோ பேச வேண்டியதில்லை. அத்துடன் இவர்கள் எழுத்தறிவு உள்ளவர்களைப் பார்க்கினும் மோசமான வறியவர்ளாகவும், நோயாளிகளாகவும், வாழ்வர்.

இக்கணிப்பு மலையகத்தில் பெருந்தோட்டத்துறையில் வாழுகின்ற மக்களுக்கு முற்று முழுதாக பொருந்தக் கூடியது. தேசிய ரீதியில் ஒப்பிட்டு நோக்குகின்ற போது மலையகத் தமிழர்களின் எழுத்தறிவு வீதம் மிகவும் தாழ் மட்டத்திலே காணப்படுகின்றது. ஒருவர் ஒரு மொழியில் தமது பெயரையும், விலாசத்தையும் எழுதக் கூடியவராக இருப்பாராயின் அவரை எழுத்தறிவு உடையவராகக் கருதலாம் என்ற புள்ளிவிபரவியல் திணைக்கள கணிப்பின்படி மலையகத்தில் 68.5 வீதமானோர் எழுத்தறிவு உடையவர்களாகக் காணப்படுகின்றனர் என அண்மைக்கால ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

கல்வியின் படி முறையை எடுத்துக் கொண்டால், தொடக்கக் கல்வி, இடைநிலைக்கல்வி, உயர்கல்வி, பட்டப்படிப்பு, பட்டமேற்படிப்பு என கல்வி பெறுவதில் பல படிநிலைகள் காணப்படுகின்றன. மலையக மக்களில் எத்தனை வீதமானோர் இந்தக் கட்டங்களை தாண்டியுள்ளனர் என்பது சுவாரசியமானதோர் வினாவாகும். மலையக சமூகத்தவர் பலர் இன்று கல்வித்துறையில் முன்னேறிவிட்டார்கள் என்றும், அவர்கள் ஆசிரியர்களாக, உயர் அதிகாரிகளாக, சட்டத்தரணிகளாக, வைத்தியர் களாக உள்ளனர் எனக் கணிப்பிட்டு, மலையகத்தின் ஒட்டுமொத்தமான கல்வி வளர்ச்சியை மதிப்பீடு செய்வது அபத்தமானதாகும். மலையகத் தமிழர்களில் எத்தனை வீதமானோர் இந்நிலையை அடைந்துள்ளனர்?

ஒரு மக்கள் குழுமத்தினரின் கல்வி வளர்ச்சியை, தனிநபரொருவரின், அல்லது சிறு குழுவினரின் சமூக மேம்பாட்டை வைத்து அளக்கும் தன்மை அர்த்தமற்றதாகும். மலையகத்தவரொருவர் உயர் பதவியை பெறுவது அல்லது கல்வியில் உயர்நிலை அடைவது புறக்கணிக்கத்தக்கதல்ல. ஆனால் அது சமூக அளவில் மலையக மக்களின் கல்வி வளர்ச்சியின் எந்த அளவுகோலும் அல்ல.

ஒரு பெண் அமைச்சராகவோ, ஜனாதிபதியாகவோ ஆகிவிடுவதன் மூலமாக பெண் ஒடுக்குமுறைகள் தீர்ந்துவிடவில்லை. தொழிலாளியொருவரை அல்லது விவசாயி ஒருவரை ஆட்சி பீடத்தில் அமர்த்துவதன் மூலம் முதலாளித்துவமோ, நிலவுடமை சமூகமோ எங்கும் முடிவுக்கு

வரவில்லை. இலங்கையில் தமிழரொருவர் பிரதமராகவோ, ஜனாதிபதியாகவோ ஆகிவிடுவதன் மூலம் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை.

கட்டாயக் கல்விக்கான வயதையடைந்த மலையகச் சிறார்கள் பலர் வறுமையின் காரணமாக பாடசாலை செல்ல முடியாத நிலையில் காணப்படுகின்றனர். ஆரம்பக் கல்வியை நிறைவு செய்யும் முன்னரே அதிகமானோர் இடைவிலகிச் செல்கின்றனர். தரம் 1 இல் சேரும் 100 மாணவர்களில் 10 வீதமானோர் கூட தரம் - 11 ஐத் தாண்ட முடியாத நிலையில் காணப்படுகின்றனர். திறமையானவர்கள் முயற்சியுடன் படித்தார்கள் உயர்நிலையை அடைந்தார்கள் எனவும் ஏனையோர் மோசமாக படித்தார்கள் கொழும்புக்கு வேலைக்கு சென்றார்கள் எனவும் கற்பிதம் செய்யப்படுகின்றது.

ஒரு சில முத்துக்களை கண்டெடுக்க மணலை அரிக்கிறது கல்வி. இந்த முத்துக்கள் சமூக கட்டமைப்பின் உயர் மட்டத்தோடு இணைய, மிச்சமுள்ள மணல் துகள்களின் நிலை கீழே இருக்கிறது.

மலையக மாணவர்களில் பெருந்தொகையானோர், தொழிலாளர்களின் பிள்ளைகளாக காணப்படுகின்றமையினால், இன்றைய பாடசாலை அமைப்பு, கலைத்திட்டம், கற்பித்தல்முறை என்பன அந்நியப்பட்டவையாகவும், வெறுப்பூட்டக் கூடியவையாகவும் காணப்படுகின்றமையினாலும், தமது அடிப்படைத் தேவையைக் கூடப் பூர்த்தி செய்துகொள்ள முடியாத பொருளாதார வள இன்மையினாலும், அநேகர் கல்வியிலிருந்து அந்நியப்பட்டு நிற்கின்றனர். மலையகத்தில் இன்று வேரூன்றி கிளைபரப்பி வருகின்ற பிரத்தியேக வகுப்புகளின் (Tution class) செல்வாக்கும் இந்நிலையை தீவிரப்படுத்தியுள்ளது.

இன்று இலவச கல்வி முறையின் மூலமாக கற்ற பல பட்டதாரிகள் வேலையற்றவர்களாகக் காணப்படுகின்றனர். விரல் விட்டு எண்ணக்கூடிய பொறியியல் (B.Sc. Eng.) வணிகவியல் (B.B.A.) பட்டங்களை பெற்றவர்கள் கூட தொழில் கிடைக்காத நிலையில் அல்லது தமக்குரிய

தொழில் கிடைக்காத நிலையில் காணப்படுகின்றனர். இவ்வம்சம் இலவச கல்வி மீதான வெறுப்பையும், விரக்தியையும் தோற்றுவிப்பனவாகக் காணப்படுகின்றன.

மறுபுறமாக சர்வதேச பாடசாலைகள், சர்வதேச பல்கலைக்-கழகங்கள் என்பன தோற்றுவிக்கப்பட்டுள்ளதுடன் வேலையுலகில் அதற்கான அந்தஸ்த்தும் உயர்ந்து காணப்படுகின்றது. ஆங்கிலத்தை பயிற்று மொழியாகக் கொண்டுள்ள இப்பாடசாலைகளில் அதிகமான கட்ட-ணங்கள் வசூலிக்கப்படுவதனால் சாதாரண குடும்பப் பின்னணியைச் சேர்ந்த பிள்ளைகள் இதனுள் பிரவேசிக்க முடியாத நிலை காணப்படு-கின்றது.

இவை இலவச கல்விக்கு எதிரான மறைமுக திட்டங்களாக அமைந்துக் காணப்படுவதில் வியப்பில்லை.

அமெரிக்காவில் அரைமில்லியன் மாணவர்களிடத்தே செய்யப்பட்ட ஓர் ஆய்வு (கோல்மன் அறிக்கையில்) பின்வருமாறு கூறுகிறது: ஒரே தன்மையான கல்வி வாய்ப்புகள் அளிக்கப்பட்ட போதினும் கூட எந்தவிதமான சமூக ஏற்றத் தாழ்வுகளுடன் அவர்கள் பள்ளியில் நுழைத்தார்களோ, அவற்றில் எவ்விதமாற்றமும் ஏற்படாமலேயே அவர்கள் பள்ளியை விட்டுச் செல்கிறார்கள். ஏழ்மையான மற்றும் பின்தங்கிய பின்புலத்திலிருந்து வந்த மாணவர்கள் மோசமாகப் படித்தார்கள். வேறுசில ஆய்வுகள் வெறும் 5 சதவீத மாணவர்கள் மட்டுமே தாங்கள் படித்த சமூகக் குழுவின் படிநிலையை தங்கள் கல்வியின் மூலம் தாண்டியுள்ளதை காட்டுகின்றன.

இது போன்ற எண்ணற்ற ஆய்வுகள் 50 ஆண்டுகளுக்கும் மேலாக அனைவருக்கும் கல்வி என்பதை நடைமுறைப்படுத்தி வரும் வளர்ச்சி-யடைந்த நாடுகளில் கூட கல்வியானது சமூக ஏற்றத் தாழ்வுகளை சீர்செய்யத் தவறிவிட்டதை உறுதிசெய்கின்றன.

ஆகவே இன்றைய கல்வி முறையானது தொழிலாளியின் பிள்ளையை தொழிலாளியாக வைத்திருக்க உதவுகின்றதே தவிர அவர்களை மேல்நிலையை அடையச் செய்வதற்கான சமூக பெயர்ச்-சிக்கான (Social Mobilation) கருவியாக அமையவில்லை.

## இன்றைய கல்வியின் நோக்கம் ..............

உலகில் காணப்படுகின்ற வரையறைக்குட்பட்ட வளங்களிலிருந்து உச்ச பயனைப் பெறுதல் கல்வியின் இலக்கு என்றவகையில், இன்றைய எசமான வர்க்கத்தினருக்கு அவசியமானதோர் கூலிப் பட்டாளத்தை உருவாக்குவது இன்றைய கல்வியின் அடிப்படையான நோக்கமாகும். வணிகமயமாகிவிட்ட இக்கல்வி முறையானது பரீட்சை தொழிற்-சாலைகளில் உற்பத்தி செய்கின்ற பண்டங்களாகவே காணப்படுகின்றன. எடுத்துக் காட்டாக இன்று முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகின்ற கணினிக் கல்வியானது, எமது நாட்டின் வளத்திற்கும், முன்னேற்றத்திற்கும் பயன்படுவதை விட இன்னொரு நாட்டின் கொள்ளைச் சுரண்டல்-காரர்களுக்கு பயன்படுவதாகவே அமைந்துக் காணப்படுகின்றன.

தற்காலத்தில் அறிமுகப்படுத்தப்படுகின்ற கலைத்திட்டங்கள், கற்பித்தல் முறைகள் என்பன மாணவர்கள் ஏற்கனவே பெற்றிருந்த திறன்களை இழக்கச் செய்துவிடுகின்றன. எசமான வர்க்கத்தினருக்கு தேவையான வகையில் மாணவர்களை தேர்ந்தெடுத்து தன் விருப்பப்படி பயிற்சியளிக்கின்றது, கல்வியின் நோக்கம் ஒழுக்கமும், பண்பாடும் கொண்ட மனிதனை உருவாக்குவது என்ற போர்வையின் பின்னணியில் மாணவர்களிடையே இயல்பாக எழும், சமூக அநீதிகளுக்கும், அடக்கு முறைகளுக்கும் எதிரான கோப உணர்வையும், விமர்சன மனோ-பாவத்தையும், வெகுசன சார்பான நடைமுறையையும் சிதைத்து விடுகின்றன. ஆசிரியர்கள், பயிற்சி என்றவகையில் இத்தகைய பட்டா-ளத்தை உருவாக்குவதற்கு மூளை சலவை செய்யப்படுகின்றனர். ஆசிரியர் பயிற்சியில் முக்கிய பாடங்களான கல்விக் கோட்பாடுகள், உளவியல் கோட்பாடுகள், ஆலோசனை கூறலும் வழிகாட்டலும் போன்ற பாடங்கள் இப்பணியினை சிறப்பாக செய்கின்றன.

பொதுவில் சராசரி புத்திஜீவிகளின் அரசியல் கடமையான சமூக முரண்களை சமரசம் செய்தல், நியாயப்படுத்தல், அழகுப்படுத்தல் எனும் பண்புகளை உள்ளடக்கியே இன்றைய கல்வி முறையானது செயற்பட்டு வருகிறது.

மறுபுறமாக மலையகக் கல்வித்துறையினை பாதித்திருக்கின்ற மற்றொரு விடயம் அநாகரிகமான அரசியல் தலையீடாகும். பெரும்பான்மை மக்களின் நலன் என்பதனை விட தமது கட்சியின் நலனை பிரதானமாகக் கொண்டு, கல்வித்துறை மீது காட்டப்படுகின்ற ஏகபோகவுரிமை மலையகக் கல்வியை பாரிய பின்னடைவுகளுக்கு இட்டுச் சென்றுள்ளது.

## மாற்றுகளை கட்டியெழுப்புதல்

உலக தத்துவ வரலாற்றை உன்னிப்பாக நோக்கும் ஒருவனுக்கு கல்விச் சிந்தனையாளர்கள் ஒரு நாட்டின் சமூகவமைப்பில் கல்வி என்பது ஒரு தனித்துவமான புலம் என்றும் அரசியல், பொருளாதாரம், பண்பாடு, மதம் முதலியன ஏனைய சுயேச்சையான தனித்தனி புலங்கள் என்றும் கருதினர். அதனால் கல்விப் புலத்தை ஒரு சுயேச்சையான முழுமையாக எண்ணி அதன் அடிப்படைக் கோட்பாடுகள், அதில் தோன்றும் பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள் ஆகியவை பற்றி தம் சுய அணுகுமுறையின் அடிப்படையில் தம் சிந்தனையில் தோன்றிய கருத்துக்களை வெளியிட்டனர். கல்விக் கோட்பாடுகளில் மாற்றம் கொண்டு வருவதன் மூலம்அல்லது கல்வி இலக்குகளை மாற்றியமைப்பதன் மூலம் அல்லது கலைத்திட்டத்தில் சீர்த்திருத்தங்களை ஏற்படுத்துவதன் மூலம் கல்விப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம் என நம்பினர். மாணவர்களை சமூகவமைப்பிலிருந்து பிரித்தெடுத்து தனியே வைத்து சமூக அமைப்பின் குணாம்ச இயல்புகளையும் சமூக நிலைமைகளுக்கேற்றவகையில் எவ்வாறு ஒருவனை சமூக மயமாக்கலாம், எவ்வாறு அவனை சமூகத்தில் நற்பிரஜையாக்கலாம் எனத் தமது உலகப் பார்வைக்கேற்ப ஆய்வுகள் செய்தனர். சமூகவமைப்பில் வர்க்க வேறுபாடுகளும், சுரண்டும் வர்க்க

ஆதிக்க நிலைமைகளும், வருமானச் சமமின்மையும், சமூக படிநிலை அமைப்புகளும் நிலவுகையில், கல்வியில் சமவாய்ப்பு, எல்லோருக்கும் கல்வி போன்ற கோட்பாடுகளை முன் வைத்தனர். அவர்கள் முன்வைத்த இத்தகைய கல்விச் சிந்தனைகள் சமூகவமைப்பின் புறநிலை யதார்த்தத்திற்கு பொருந்தாதவையாகவும், நடைமுறையில் பிரயோகத் திறன் அற்றவையாகவும் பயனற்றுப் போன உண்மையை உணர்த்துவனவாயும் அமைவதைக் காணலாம்.

எனவே கல்வியானது எல்லோருக்கும் பொதுவானது என பலர் தத்துவம் பேசினாலும், அவை வர்க்க சமுதாய அமைப்பில், வர்க்க வேறுபாடுகளுக்கேற்பவே அமைந்துக் காணப்படும். இன்றைய கல்வி முறையானது ஒரு வகையில் எசமான வர்க்கத்தினருக்கும், ஒடுக்கப்பட்ட மிகப்பெருந்திரளான உழைக்கும் மக்களுக்கும் இடையில் நடைபெறுகின்ற பேச்சுவார்த்தைகளாகவே அமைந்து காணப்படுகின்றது. இந்த ஒப்பந்தத்தில் எசமான வர்க்கம் லாபம் அடைவது உண்மைதான். நவகொலனிய யுகத்தில் ஏகாதிபத்தியத்திற்கு தேவையான கூலிப் பட்டாளத்தை உருவாக்கிய இக்கல்வி முறைதான் அதற்கு எதிரான புத்திஜீவிகளையும் உருவாக்கியுள்ளது.

இதிலிருந்து விடுதலை பெறுவது எவ்வாறு என்பதே நம்முன் உள்ள சவால் மிக்க வினாவாகும். மாற்று பாடத்திட்டம், மாற்றுக் கற்பித்தல் முறைகள் போன்ற சிந்தனைகள் தத்துவார்த்த ரீதியாக முன்வைக்கப்பட வேண்டும்.

ஆசிரியர் சங்கங்கள், சமூகமாற்ற இயக்கங்கள்,கலாசார அமைப்புகள் இது தொடர்பில் தமது நடவடிக்கைகளை திட்டமிடப்பட்ட வகையில் முன்னெடுத்தல் அவசியமானதாகும். தொழிலாளர்களுக்கான கல்வி இயக்கம், பெண்கள் தொடர்கல்வித் திட்டம், இளைஞர்களுக்கான தொழிற்கல்வி திட்டம் போன்ற அம்சங்களை கட்டியெழுப்புவதற்கான பிரமாண்டமான திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

## முடிவுரை

மனிதனை மனிதன் அடக்கி அடிமைப்படுத்தும் எல்லாவிதமான முயற்சிகளும் பல்வேறு காலங்களில் போராட்டங்களினாலேயே மாற்றப்பட்டன. மனமாற்றத்தால் மாற்றம் ஏதும் ஏற்படாது. மந்திரத்தால் மாங்காய் விழாததைப் போல சமூகமாற்றமின்றி கல்விப்பிரச்சினைகளை தீர்த்து விட முடியாது. எனவே நடைமுறை என்பது ஒன்று தான். அதன் களமும், தளமும் தான் மாற்றப்படுகின்றது.

## உசாத்துணைகள்


1. நவரத்தினம், உ. (2001), *எல்லோருக்கும் கல்வி*, கொழும்பு.
2. சுந்தரராமன், தி. (2000), *கட்டுரையாசிரியர் கல்வி*, சென்னை.
3. பெனடிக்.யோ. (2000), *லெனினது கல்விச் சிந்தனைகள்*, கொழும்பு.

# லோரன்ஸ் கோல்பேர்க்

## (Lawrence Kohlberg)

1927 - 1987

---

மனித வரலாற்று வளர்ச்சிப் போக்கில் ஒழுக்கநெறி தொடர்பான சிந்தனைகளும் வழிகாட்டல்களும் எல்லா மொழிகளிலும் பரக்கத் தோற்றம் பெற்று இருப்பதை அவதானிக்கின்றோம். உலகளாவிய அடிப்படையில் தோற்றம் பெற்ற சமயங்களும் ஒழுக்கம் தொடர்பான வலியுறுத்தலையே தனது மூலக் கருத்துக்களாகக் கொண்டு இருக்கின்றன. இவ்வாறு மக்களால் பின்பற்றப்படும் ஒழுக்கநெறிகளின் தோற்றப்பாடு தொடர்பாகப் பல்வேறு ஆய்வாளர்கள் ஆய்வுகளை மேற்கொண்டு இருக்கின்றனர். 20ம் நூற்றாண்டில் ஒழுக்கநெறி தொடர்பான ஆய்வை மேற்கொண்டவர்களில் முக்கியமானவர் லோறன்ஸ் கோல்பேர்க் ஆவார்.

லோறன்ஸ் கோல்பேர்க் கல்வியியலாளர், உளவியலாளர், தத்துவவியலாளர் ஆகிய பல்வகைப் பாத்திரங்களினூடாகத் தன்னை உலகுக்கு வெளிக்காட்டியவர். இவர் பழமை, புதுமையாகிய இரண்டையும் இணைக்கும் வகையில் சோக்கிரட்டீஸ், பியாயே, டூயி ஆகியவர்களின் கருத்துக்களின் ஊடாகத் தனது கருத்துக்களைக் கட்டியெழுப்பியவர்.

உளவியல் துறையில் நடத்தைவாதம், அறிகைவாதம் ஆகிய கோட்பாடுகள் பிரபல்யம் பெற்றுள்ளன. கோல்பேர்க் தனது ஒழுக்கவிருத்தி தொடர்பான எண்ணக்கருவாக்கத்தினை பியாயேயின் அறிகை

உளவியலின் விருத்திக்கட்ட அடிப்படைகளாகக் கொண்டு தனது கருத்தைக் கட்டியெழுப்பியுள்ளார். மறுபுறத்தில் ஒழுக்க நடத்தை, நீதியான சமூகம், சனநாயக நடைமுறைகள் தொடர்பான அம்சங்களிலும் கரிசனை காட்டி வந்துள்ளார். கல்விச் செயன்முறையில் கலைத்-திட்டத்தின் ஊடாக ஒழுக்கவிருத்தி தொடர்பான விடயங்களையும் பாடசாலை நிருவாகக் கட்டமைப்பு அதன் ஆளுகை தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொண்டவர்.

கல்வித்துறை தொடர்பான ஒழுக்கவியலுக்கு அப்பால் கட்டிளமை வயதினரின் ஒழுக்க விருத்தி, சமூக அடிப்படையிலான கல்வி, சமயக் கல்வி, சிறைச்சாலைக் கல்வி தொடர்பாகவும் கரிசனை காட்டி வந்தவர்.

இவருக்கு ஒழுக்க விருத்தி தொடர்பான துறையில் ஆர்வம் ஏற்படுவதற்கு அடிப்படையாக இருந்தது நாசிசக் கட்சியின் அக்காலத்து அடாவடித்தனங்கள் எனக் குறிப்பிடுவார். அத்தோடு பல்கலைக்-கழகத்தில் மாணவனாக இருந்த காலத்தில், லொக், ஜெபர்சன், ஸ்வர்ட்மில் ஆகியோர் மனித உரிமைகள் தொடர்பாக வெளிப்படுத்திய ஆக்கங்கள் இவரின் சிந்தனையில் தாக்கத்தைத் தந்தன. இவர்களின் கருத்துக்கள் அவரை ஒழுக்கநெறியின் பால் ஆழமாச் சிந்திக்க வைத்தன எனலாம்.

இவர் தனது ஒழுக்கநெறி விருத்தி தொடர்பான கோட்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கு பிஜாயேயினதும், டூயியினதும் கருத்துக்கள் அடிப்படையாக அமைந்தன. இவர் தனது கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வுத்துறையாக "ஒழுக்கசிந்தனையும் இளைஞர் தெரிவும்" என்ற பகுதியை தெரிவு செய்தார். சிக்காக்கோ பல்கலைக்கழகத்திலும், காவேட் பல்கலைக்கழகத்தின் பட்டக்கல்வி கல்லூரியிலும் கற்பித்தார். இவர் தனது பெரும்பாலான ஆய்வுகளை இறக்கும் காலம் வரை காவேட் பல்கலைக்கழகத்தின் பட்டக் கல்விக் கல்லூரியிலேயே செய்துவந்தாஹர்.

ஒழுக்கநெறியானதைக் கற்பிக்க முடியுமா? அல்லது பயிற்சியின் ஊடாகப் பெற முடியுமா? அல்லது இயற்கையான உளப்பாங்கா? அல்லது பாரம்பரியத்தால் ஏற்படுவதா என்பதனைத் தனது ஆய்வுக் கருத்துகளைக் கொண்டே ஆய்வுகளை மேற்கொண்டார்.

முறையான ஒழுக்கநெறி இல்லாத சமூகம் கெட்டழிந்துவிடும் என்பதை கோல்பேர்க் வலியுறுத்தினார். விழுமிய ஊக்கல் நடத்தையும், ஒழுக்கமும் அன்றாட வாழ்க்கைத் தீர்மானங்களை எடுப்பதற்கு அடிப்படையானது எனக் கொண்டார். அடுத்தபடியாக நினைத்தோ அல்லது நினையாமலோ ஒழுக்க நீதி, சிந்தனை ஆகியவை ஒழுக்கத்தின்பால் செல்வாக்குச் செலுத்துவன எனக் கருதினார்.

மேற்கத்திய கல்விச் சிந்தனையின் முன்னேற்றவாத தொகுதியைச் சேர்ந்தவர் கோல் பேர்க் ஆவார். இவர், பிள்ளையும் அதன் சூழலும் இணைந்தே பிள்ளையின் ஒழுக்கநெறிச் சிந்தனைக்கு வழிகாட்டுவதாகக் குறிப்பிடுகின்றார். இக்கருத்தை ஒட்டியே வில்லியம் யேம்ஸ், யோன் டூயி போன்றோரும் பிள்ளைக்கும் சமூகத்துக்கும் இடையிலான இயல்பான இடைத்தாக்கமே ஒழுக்கநெறி விருத்தியில் செல்வாக்குச் செலுத்துகின்றன எனக் கருதுகின்றனர். கோல்பேர்க்கின் கருத்துப்படி அறிகைக்கும், ஒழுக்கவிருத்திக்கும் இடையே ஒற்றுமை இருப்பதாகக் குறிப்பிடுகிறார். தர்க்கரீதியானதும், விமர்சனரீதியான சிந்தனையினதும் விருத்தி அறிகைக் கல்வியின் மையமாகக் கொண்டு பரந்த அடிப்படையிலான ஒழுக்க விழுமியத்துக்கு வழிவகுக்கின்றது.

கோல்பேர்க்கின் கொள்கையானது பியாஸேயின் ஆய்வின் அடிப்படையில் கட்டியெழுப்பப்பட்டதாகும். பியாஸேயின் கோட்பாட்டில் "திரள்கை" முக்கியமானது. திரள்கையானது எமது அன்றாட அனுபவங்களை உள்வாங்கும் அமைப்பாகும். ஒருவர் எவ்வாறு உலக அனபவங்களை உள்வாங்குகிறார் என்பதைத் "திரள்கை" (Sehema) வளிப்படுத்துகின்றது. "திரள்கை"யானது தொடர்ந்து மாற்றத்துக்குள்ளாகின்றது. இந்த வகையில் விருத்தி என்பது ஞாபகக் கட்டமைப்பில் மாற்றத்தை உண்டுபண்ணுவதாகும். புதிய அனுபவங்கள் திரள்கையில்

தன்மயமாதலுக்கோ தன்னமைவாவதற்கோ உட்படலாம். அறிகையும். ஒழுக்கநெறி விருத்தியும் தொடர்ந்து செயற்படுவதால் ஒரு குறித்த சிந்தனை காலவோட்டத்திற்கு ஏற்ப மாற்றமடையும். விரக்தியும் முதிர்ச்சியும் அறிகைப் புலத்தில் தொடர்ந்து மாற்றத்தைக் கொண்டு வருகிறது.

இவர் பல நூல்களையும், கட்டுரைகளையும் வெளியிட்டுள்ளார். அவற்றுள் முக்கியமானவை ஒழுக்கவிருத்தித் தத்துவம், ஒழுக்கவிருத்தி உளவியல், கோல்பேர்க்கின் ஒழுக்கக் கல்விநோக்கு என்பன குறிப்பிடத்தக்கன.

சமகாலத்தின் எல்லா மட்டங்களிலும் ஒழுக்கநெறி பிறழ்வுபட்டுச் செல்வதை அவதானிக்கலாம். இந்நிலையில் கல்வியாளர்கள் தமது கலைத்திட்டங்களில் கோல்பேர்க்கின் ஒழுக்கவியல் சிந்தனைகளைக் கவனத்தில் கொள்வார்களெனில் எதிர்கால மாணவர்களின் நடத்தைக் கோலங்களில் தாக்கத்தை ஏற்படுத்தலாம் என்பது குறிப்பிடத்தக்கது.

- உலகநாதர் நவரத்தினம்

# ச. ஹன்டி பேரின்பநாயகம்

1899-1977

திரு. ஹன்டி பேரின்பநாயகம் அவர்கள் பன்முக ஆளுமையைக் கொண்டவர். சமயம், அரசியல், சமூக சீர்திருத்தம், மொழி வளர்ச்சி, பண்பாடு, கலை ஆகியவை அனைத்துக்கும் புதுப் பரிமாணங்களை உருவாக்கியவர்.

ஹன்டி பேரின்பநாயகம் என்று கூறும்போது, கொக்குவில் இந்துக் கல்லூரிதான் எமது ஞாபகத்தில் வருகின்றது. இவர் அங்கு சேவையாற்றிய காலம் (1944-1960) அக்கல்லூரியின் பொற்காலமாகும். அவரின் நிர்வாகத் திறமையையும், கல்லூரியின் வளர்ச்சிக்காக அவர் ஆற்றிய சேவையையும் இன்றும் அவரது பழைய மாணவர்கள் எடுத்துக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். இவர் இக்கல்லூரியில் அரசியல், ஆங்கிலம், இலக்கியம், இலத்தீன் போன்ற பாடங்களை கற்பித்து நல்லாசிரியன் என்ற புகழைப் பெற்றார்.

ஆசிரியர்கள் மத்தியிலும் நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்தி, மாணவர்களுடன் அன்பாகப் பழகி, அறிவு மொழிகளைப் பேசி, நல்ல வழியில் செல்வதற்கு வழிவகுத்தார். அந்தக் காலத்தில் மாணவர்களைத் தண்டிப்பது பொதுவாக நிகழ்ந்த போதிலும், இவரோ ஒருபோதும், மாணவர்களைத் தண்டிப்பதற்கு பிரம்பைப் பயன்படுத்தவில்லை.

1972ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்ட கல்விச் சீரமைப்பின் கீழ் கொண்டுவரப்பட்ட தொழில் முன்னிலைப் பாடங்களை 60களிலேயே ஹன்டி அவர்கள் தமது பாடசாலையில் அறிமுகப்படுத்தினார்.

ஹன்டி அவர்கள் உயர்ந்த நோக்குடைய உத்தமர். இந்து சமயத்திலும் அதன் பண்பாட்டிலும் ஆழ்ந்த பற்றுடையவர். தான் ஒரு இந்துவாகப் பிறக்காவிட்டாலும், தமது பிள்ளைகளாவது இந்து சமயப் பண்பாட்டில் வளர வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டவர். தமிழனாகப் பிறந்தவன் தனது ஆற்றலுக்கு எல்லா விதத்திலும் பொருந்தக்கூடிய சமயத்தை விட்டு பிற சமயத்தைப் பின்பற்ற வேண்டிய தேவையில்லை என்ற முடிவான கருத்தைக் கொண்டவராக இருந்தார்.

மகாத்மாகாந்தி அடிகள் வகுத்த வழியில் வாழ விருப்பமுடையவராகக் காணப்பட்டார். வெள்ளைக் கதர் வேட்டி, சால்வை, மேலங்கிகளை அணிவதைப் பழக்கமாகக் கொண்டிருந்தார். காந்தி அடிகள் இலங்கை வரவும், கீரிமலை மகாநாட்டை நடத்தவும் முன்னின்று உழைத்தார். அத்துடன் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருவையும் யாழ்ப்பாணத்துக்கு அழைப்பதற்குக் காரணமாயிருந்தார்.

தேசாபிமானம், தமிழ்மொழி மறுமலர்ச்சி, இன ஒற்றுமை, தீண்டாமை ஒழித்தல், குடிசைக் கைத்தொழில் ஆகிய துறைகளில் முன்நின்று உழைத்தார்.

"கேசரி" என்ற வாரப் பத்திரிகையின் ஆசிரியராகச் சேவையாற்றி, துணிவுடன் நல்ல ஆழ்ந்த கருத்துக்களை தனது தலையங்கங்களிலே சிறப்பாக வழங்கினார்.

உயர்ந்த நோக்குடைய ஆசிரியர், மக்கள் நலத்தை விரும்பிய அரசியல்வாதி, தன்னலமற்ற தியாக வாழ்க்கை ஆகிய உயரிய நோக்கங்களோடு வாழ்ந்தார். தனது நாட்டின் பாரம்பரியத்திலும், பண்பாட்டிலும் பெருமதிப்பைக் கொண்டவராகத் திகழ்ந்தார். இவர் ஒரு உண்மையான தேசபக்தராகவும் விளங்கினார்.

இலங்கை தேசிய கல்வி ஆலோசனைக் குழுவில் பல்லாண்டுகள் சேவையாற்றினார். யாழ்ப்பாண தேசிய காங்கிரசின் தோற்றத்திலும், அதன் வளர்ச்சியிலும், பங்கேற்று, அக்கால இளைஞர் குழாத்தின் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். 23-03-1899 ஆம் ஆண்டு பிறந்த இவர், 11-12-1977 ஆம் ஆண்டு தனது 78 ஆம் வயதில் காலமானார்.

- செ. கமலாகரன்

# தமிழ்க் கல்விக் கழகம்
# Tamil Education Society


| | | |
|---|---|---|
| காப்பாளர்கள் | : | பேராசிரியர் கா. சிவத்தம்பி |
| | | பேராசிரியர் சோ. சந்திரசேகரன் |
| | | கலாநிதி ஹுசைன் இஸ்மாயில் |
| | | திரு. ஆர். எஸ். நடராஜா |
| தலைவர் | : | திரு. சி. ரி. ராஜேந்திரன் |
| உபதலைவர்கள் | : | கலாநிதி மா. கருணாநிதி |
| | | திரு. உ. நவரத்தினம் |
| | | திரு. என். நடராசா |
| செயலாளர் | : | திரு. தை. தனராஜ் |
| நிர்வாகச் செயலாளர் | : | திரு. க. குமரன் |
| துணைச் செயலாளர் | : | திரு. மா. கணபதிப்பிள்ளை |
| பொருளாளர் | : | திரு. க. ஞானசேகரம் |
| செயற்குழு உறுப்பினர்கள் | : | திரு. லெனின் மதிவாணம் |
| | | கலாநிதி பாக்கீர் ஜவ்பர் |
| | | திரு. கே. சந்திரலிங்கம் |
| | | செல்வி. வி. விஜயலக்ஷ்மி |
| | | திரு. எம். எச். எம். ஹசன் |
| | | திரு. ஏ. எஸ். சந்திரபோஸ் |

Designed & Printed
by
Kumaran Press (Pvt) Ltd.
201, Dam Street, Colombo 12
Tel. 2421388